பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 14 வியாழக்கிழமை (28~06~2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:214

# தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக பேரியல் செயற்படுவதற்கு தடை உத்தரவு!

## கொழும்பு மாவட்ட நீதிமன்று விடுத்தது





**கொழும்பு,ஜூன்28**

**அமைச்சர் ஜனாபா பேரியல் அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராகச் செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்தது.**

**அடுத்த பதினான்கு நாள்களுக்கு - இந்த விவகாரம் குறித்து நீதிமன்றம் புதிய முடிவுகளை எடுக்கும் வரை - இந்த இடைக்காலத் தடை நடைமுறையில் இருக்கக்கூடியதாக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.**

கொழும்பு மாவட்ட நீதிபதி சுனில் ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் இந்த இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் யாப்பின் பிரகாரம் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரே தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக இருக்க முடியும் எனத் தெரிவித்து அமரர் அஷ்ரப்பின் முன்னாள் செயலாளர் வை. எல்.எஸ்.ஹமீத் மற்றும் உஷைன பைலா ஆகியோர் நேற்றுக் காலை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

மனு மீதான பூர்வாங்க விசாரணைகளை நடத்திய நீதிபதி தேசிய ஐக்கிய முன்னணியின் யாப்பு விதிகளின் அடிப்படையில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அந்த முன்னணியின் தலைவராகத் தொடர்ந்து செயற்பட முடியாது என்றும் -

முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீம் தொடர்ந்தும் செயற்படவேண்டுமானால் அவர் உடனடியாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும் -

உத்தரவு பிறப்பித்தார்.

(உ-7)

## தே.ஐ.முவின் தலைமையையும் ஹக்கீம் ஏற்றுக்கொண்டார்

கொழும்பு,ஜூன்28

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று வழங்கிய இடைக்கால உத்தரவை அடுத்து -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராகவும் நேற்று மாலை பதவியேற்றுக் கொண்டார்.

சட்டத்தரணி என்.எம்.சஹீட்டை தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளராக நியமித்து முன்னணியின் நடவடிக்கைகளை வழிநடத்தும்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பேரியல் அணி எம்.பிக்கள்

## அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கக் கோரி ஹர்த்தால்

### நேற்று கல்குடாவில் நடந்தது

மட்டக்களப்பு,ஜூன்28

அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் எம்.பிக்களான யூ.எல்.எம். முகைதீன், மருதூர்க்கனி ஆகியோர் அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்க வேண்டுமெனக் கோரி மட்டக்களப்பு கல்குடாப் பகுதியில் நேற்று ஹர்த்தாலும், கடையடைப்பும் நடத்தப்பட்டன.

கல்குடா, ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் உள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

# தன் பொறுப்புக்களை பிரதமரிடம் ஒப்படைத்துவிட்டு ஜனாதிபதி சந்திரிகா திடீரென வெளிநாடு பயணம்

## கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

கொழும்பு,ஜூன்28

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவை நாட்டின் பதில் ஜனாதிபதியாக நியமித்து, தனது அதிகாரங்



ஜனாதிபதி

கள் மற்றும் பொறுப்புக்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்து விட்டு நேற்று அதிகாலை திடீரென சிங்கப்பூர் ஏயர் லைன்ஸ் விமானத்தில் நாட்டைவிட்டுப் புறப்பட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சிங்கப்பூர் ஏயர் லைன்ஸின் விமான சேவை இலக்கம் SQ 402 மூலம் அவர் புறப்பட்டார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் பணிப்புக்கமைய நேற்றுக் காலை 7.45 மணியளவில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பதில் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார் என நேற்றுக் காலையில் அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை 1978இல் நடைமுறைக்கு வந்தது தொடக்கம் ஆட்சியிலிருந்த ஏனைய மூன்று ஜனாதிபதிகளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமது ஜனாதிபதிப் பொறுப்பை எவருக்கும் கையளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் வழமைக்கு மாறாக



பதில் ஜனாதிபதி

இப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்துத் தமது பொறுப்புக்களை அவரிடம் ஒப்படைத்து விட்டு நாட்டைவிட்டு வெளியேறி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்

### இப்படிக் கூறுகின்றது ஐ.தே.க.

கொழும்பு,ஜூன்28

நாடு தற்போது சிக்கிக் கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும், மக்களை எதிர்கொள்ளமுடியாததாலுமே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார் என்று ஐ.தே.கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐதே.கட்சிப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருணாசேன கொடித்துவக்கு ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது :-

நாட்டைவிட்டு வெளியேறியது தொடர்பாக மக்களை ஏமாற்றும் விதமான காரணங்களைத் தெரிவிக்காமல், பிரதம மந்திரியிடம் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் , கடமைகளை ஒப்படைத்ததற்கான உண்மையான காரணங்களை உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் பயணம் குறித்து முரண்பாடான தகவல்கள்

கொழும்பு,ஜூன்28

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டுக்குச் சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டாலும் -

அவரது வெளிநாட்டுப் பயணத்தின் நோக்கம் குறித்து முரண்பாடான பல தகவல்கள், பேச்சுக்கள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றன.

அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில், ஜே.வி.பியின் முழு ஆதரவை அரசுக்குத் திரட்டுவதற்காக லண்டனில் உள்ள ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காகவோ -

அல்லது -

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசைப் பதவி விலகுமாறு கோரி ஐ.தே.க. சனியன்று ஆர்ப்பாட்டம்

### மேல் மாகாணத்தில் பல இடங்களில் நடக்கும்

கொழும்பு,ஜூன்28

அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி ஐ.தே.கட்சி நாளைமறுதினம் சனிக்கிழமை மேல் மாகாணத்தில் பரவலான ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்படவுள்ளன.

கொழும்பில் நடைபெறவுள்ள பேரணி மிகப் பிரமாண்டமான அளவில் நடத்தப்படும் எனவும் -

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்கள் இந்தப் பேரணியில் கலந்து கொள்வார்கள் எனவும் -

ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மீண்டும் வேலைநிறுத்தத்தில் குதிக்க சுத்திகரிப்புத் தொழிலாளர் முஸ்தீபு!

## கோரிக்கைகளை நிறைவேற்றக் காலக்கெடு விதிக்கின்றனர்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தாம் ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாநகர சபை நிர்வாகத்துக்குக் காலக்கெடு விதித்துள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன்னர் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் வேலைநிறுத்தத்தில் குதிக்கப் போவதாகவும் அவர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்க யாழ்.கிளை நேற்று மாலை பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்தது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுச் சுகாதார பொறியியற் பிரிவிற்கு ஊடாக, யாழ்.மாநகர சபை ஆணையாளரால் 26.06.2001 அன்று அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் சார்பாக 27.06.2001 இன்று (நேற்று) நாவலர் மண்டபத்தில் தமது சங்கத் தொழிலாளர்கள் அனைவரும் கூடினோம்.

அங்கே யாழ்நகரபிதாவும் ஆணையாளரும் தலைமை தாங்கி, நமது பிரச்சினைகளைக் கேட்டார்கள். அங்கே பல தொழிலாளிகள் பல கேள்விகளை எழுப்பினார்கள். ஆனால் எந்தவித நேரடியான பதிலும் நமக்கு நகரபிதாவினால் தரப்படவில்லை.

நாளை மாதாந்தக் கூட்டத்தில் நமது பிரச்சினைகள் ஒவ்வொன்றையும், பிரஸ்தாபித்து, அதற்கான ஏதுவான காரணங்களைத் தேடி நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ்.மாநகர பிதா கூறினார்.

கடந்த 16.06.2001 அன்று நாம் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தில், பிரதி மேயரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் த.சுபத்திரன், ம.மங்களநேசன் மற்றும் புளொட் உறுப்பினர்களும் நிர்வாக சபை அதிகாரிகளும் கலந்துகொண்டு, நம்மையும் அழைத்து, யாழ்.மாநகர சபை அதிகாரங்களுக்குட்பட்ட விடயங்களை உடனடியாக நிறைவேற்றுவதாகவும் மாநகர சபை அதிகாரங்களுக்கு மேற்பட்ட விடயங்களைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்றும் பிரதி மேயருடைய ஒப்பம் இட்ட கடிதத்தை நமது தொழிற் சங்கத் தலைவரிடம் யாழ். மாநகர சபை உறுப்பினர் மங்கள நேசன் உட்பட பல உறுப்பினர்கள் கையளித்தார்கள்.

ஆனால் இதுவரை எமது எந்த விதமான கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை.

அதேவேளை, இன்று நடைபெற்ற கூட்டத்திற்கு, 18.06.2001 அன்று கலந்துகொண்ட மாநகர உறுப்பினர்கள் ஏன் அழைக்கப்படவில்லை என வினவியபொழுது, மாநகர பிதா நாடகம் ஆடுவது நமது தொழிலாளர்களுக்குத் தெரியவந்துள்ளது.

இருப்பினும், நாம் எதிர்வரும் 29ஆம் திகதி பிற்பகல் 4.00 மணி வரை யாழ்.மாநகர சபைக்குக் காலக்கெடு கொடுத்துள்ளோம்.

அதற்குள், யாழ்.மாநகர சபை நிர்வாகம் நமது கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் நாம் குதிக்கவுள்ளோம் என்பதை யாழ்.மாநகர மக்களுக்கு அறியத்தரவுள்ளோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கசிப்பு ஒழிப்பில் ஈடுபட்டவர் கழுத்து வெட்டப்பட்டு கொலை!

## புத்தூர் கிழக்கில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

சட்டவிரோத மதுபான(கசிப்பு) உற்பத்தியாளர்களுக்கு எதிராக அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யச் சென்றவர்களை கசிப்பு உற்பத்தியாளர்கள் எனக் கருதப்படும் சிலர் வழிமறித்து நடத்திய தாக்குதலில் இளைஞர் ஒருவர் கழுத்து வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.

புத்தூர் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இராஜரட்ணம் உதயகுமார்(வயது22) என்பவரே கொல்லப்பட்டார்.

கசிப்பு உற்பத்திக்கு எதிராகச் செயற்பட்டு வரும் புத்தூர் குருநாதர் சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கும் இங்குள்ள கசிப்பு உற்பத்தியாளர்களுக்கும் இடையே நீண்டகாலமாக பகையுணர்வு நிலவி வந்தது.

நேற்று முன்தினம் இது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து மேற்படி சனசமூக நிலையத்தைச் சேர்ந்தவர்கள் நேற்றுக் காலை அச்சுவேலி பொலீஸ் நிலையத்துக்கு இது தொடர்பாக முறையிடச் சென்ற போது கசிப்பு உற்பத்தியாளர்களினால் வழிமறித்து தாக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது.

கள்ளுச்சீவும் பாளைக் கத்தியுடன் வந்த ஒருவர் மேற்படி இளைஞனின் கழுத்தை வெட்டியதாகவும்-

இதனால் கீழே விழுந்த இளைஞர் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்தபின் அவ்விடத்திலேயே உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இளைஞனின் சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் பொருட்டு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(உ-5-15-139)

## இடம்பெயராமல் தங்கியிருந்த

# வயோதிபர்கள் இருவர் எலும்புக் கூடுகளாக மீட்பு

## சரசாலைப் பகுதியில் இருந்து

யாழ்ப்பாணம்,ஜூன்28

சரசாலைப் பகுதியில் இரு வீடுகளில் இருந்து கொடிகாமம் பொலீஸாரினால் அண்மையில் இரு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

சரசாலைப் பகுதிக்கு மக்கள் செலவதற்கு அண்மையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள் கொடுத்த தகவலின் பேரில் இந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் இப்பகுதியில் இருந்து மக்கள் எல்லோரும் இடம் பெயர்ந்த போது இடம்பெயர முடியாத நிலையில் தமது வீடுகளில் தங்கியிருந்த வயோதிபர்களான ஓர் ஆணினதும் ஒரு பெண்ணினதும் எலும்புக் கூடுகளே இவை என்று உறவினர்களினால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

இந்த இரண்டு எலும்புக் கூடுகளும் மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.சட்ட வைத்திய அதிகாரியிடம் பொலீஸாரினால் இன்று ஒப்படைக்கப்படவுள்ளன.

(உ-5)

## வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில்

# ஆசிரியர் பற்றாக்குறையால் 2 லட்சம் மாணவர்கள் பாதிப்பு

## ஆய்வு மூலம் கண்டறியப்பட்டது

கொழும்பு,ஜூன்28

தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கான 4ஆயிரத்து 550 வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 2 லட்சம் மாணவர்களின் கல்வி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் அண்மையில் நடத்திய மதிப்பீடு ஒன்றில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாகக் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வாரஇதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள, தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் சுமார் 6 லட்சத்து 31 ஆயிரத்து முப்பத்துமூன்று மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர்.

மேற்படி மாணவர்களுக்கு நிறைவான கல்வியை வழங்குவதாயின் 23 ஆயிரம் தமிழ்மொழிமூல ஆசிரியர்களும், 4ஆயிரத்து நாற்பத்தைந்து சிங்கள ஆசிரியர்களும் தேவை. எனினும் 18 ஆயிரத்து 450 தமிழ்மொழிமூல ஆசிரியர்களும் 4ஆயிரத்து இருநூற்று பதின்மூன்று சிங்கள ஆசிரியர்களுமே கல்வி கற்பித்து வந்துள்ளனர்.

இந்த வகையில் 168 சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் மேலதிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கான 4ஆயிரத்து 450 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இதேவேளை -

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழிமூல அதிபர்களுக்கு ஆயிரத்து 539 வெற்றிடங்கள் உள்ளன. எனினும் ஆயிரத்து 58 அதிபர்களே கடமையில் உள்ளனர்.

(ம-7)

## குடிதண்ணீர் திட்டம் விஸ்தரிக்கப்படும்

வடமராட்சி,ஜூன்28

பருத்தித்துறை நகரசபை குடி தண்ணீர் விநியோகத்தை நகரில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக பருத்தித்துறை பஸ் நிலையம், நான்காம் குறுக்குத்தெரு, கோரியடி, சுப்பர்மடம் ஆகிய நான்கு இடங்களிலும் தண்ணர் தொட்டிகள் அமைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகிக்கப்படும். தொடர்ந்து ஏனைய இடங்களிலும் இது போன்ற திட்டம் விஸதரிக்கப்படும்.

தற்போது பவுஸர் வண்டி மூலம் நகரிலுள்ள மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(ஜ-173)

## கணனி மயப்படுத்தும் ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.மாநகர சபைப் பணிகளைக் கணனி மயப்படுத்தும் திட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக அங்கு இன்று கணனி ஒன்றை சம் பிரதாய பூர்வமாக இயக்கி வைக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த கே.மதிவாணன் என்னும் வர்த்தகர் யாழ்.மாநகர சபைக்குக் கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். அந்தக் கணனியே இன்று பிற்பகல் 4 மணிக்கு அங்கு இயக்கி வைக்கப்படவுள்ளது.

(ஜ-5)

## ஆயர் தின திருப்பலி

யாழ்ப்பாணம்,ஜூன்28

எதிர்வரும் 3 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள ஆயர்தினத்தை முன்னிட்டு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த திருப்பலியை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாகவும் இறைவனுக்கு நன்றித் திருப்பலியாகவும் ஒப்புக் கொடுக்கவுள்ளனர்.

(ம-6-4)

# ஐம்பது இந்திய மீனவர்களும் தொடர்ந்து விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கடந்த சில மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஐம்பது இந்திய மீனவர்களும் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் சு.பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

கச்சதீவு மற்றும் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து மூன்று தடவைகளில் இந்த மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருந்தமை தெரிந்ததே.

(உ-5)

## கொடிகாமம் பகுதியில்

# காலாவதியான பொருள்கள் திகதி மாற்றப்பட்டு விற்பனைக்கு!

## திடீர்ப் பரிசோதனையில் கண்டுபிடிப்பு

தென்மராட்சி,ஜூன்28

கொடிகாமம் நகப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் நேற்று திடீர் பரிசோதனை நடத்தப்பட்டபோது காலாவதியான பெருமளவு பிஸ்கட்டுகள் வர்த்தகர்களால் கால நீடிப்புச் செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

1999 ஆகஸ்ட் மாதத்துடன் காலாவதியான பிஸ்கட் பைக்கற்றுகளில் 2002 வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தமை கண்டு கண்டுபிடிக்கப்பட்டு அவை அவ்விடத்திலேயே அழிக்கப்பட்டன.

கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர் ந.நிர்மலானந்தன் தலைமையிலான சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களே இந்தத் திடீர்ப் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

(உ-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டிதர்

**திரு.மு.சு.வேலாயுதபிள்ளை**

(அதிபர், Sp. Trd. Com., S.L.P.S. 2-I)

எமது கல்லூரி அதிபர் பண்டிதர் **திரு.மு.சு.வேலாயுதபிள்ளை** அவர்கள் அதிபர் தரம் 2-I இற்கு பதவி உயர்வு பெற்றமையை உளமாரப் பாராட்டுவதுடன் அவரின் பணி சிறக்கவும் புகழ் ஓங்கவும் மேலும் பல உயர் வுகள் பெற்று வளம் பல நிறைவு பெறவும் எல்லாம் வல்ல இறைவன் ஆசி வேண்டி இதயங் கனிந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்,

*காரைநகர்.* (89537) யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

# மரண அறிவித்தல்கள்

## இராசையா ஜீவரட்ணம்

தாழையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசையா ஜீவரட்ணம் டென்மார்க்கில் நேற்று (27.06.2001) புதன்கிழமை காலமானார்.

இவர் இராசையா - அன்னம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியராசா மற்றும் மலரம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அரியமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றொனி மற்றும் தர்ஷினி, றொபினி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வில்லியவின்சன்
(இராசசிங்கம் - மைத்துனர்)
செம்பியன்பற்று

*11, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*சுண்டிக்குளி.* (89534)

## வைத்திலிங்கம் சுந்தரம்மா

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் பயிரிக்கூடலை வசிப்பிடமாகவும் தற்பொழுது இல 75, பண்டாரிக்குளம் வவுனியாவில் வசித்து வந்தவருமாகிய வைத்திலிங்கம் சுந்தரம்மா 27-06-2001 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் முத்துப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தம்பதிகளின் மருமகளும் அரியமலர் தனபாலசிங்கம் (V.T.S. கந்தானை), உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), வன்னியசிங்கம் (பிரான்ஸ்), புஸ்பமலர், தர்மகுலசிங்கம் (லண்டன்), சோதிமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தனலட்சுமி, காலஞ்சென்ற கனகம்மா மற்றும் லோகாம்பிகை (புத்தளம்), கனகசிங்கம் (M.P.C.S - காரைநகர்) அகியோரின் சிறியதாயாரும், சோதிநாதன் (ஓம் முருகா சோதி மாளிகை), புஸ்பமலர் (வவுனியா), தனலட்சுமி (பிரான்ஸ்), தேவி (பிரான்ஸ்), சந்திரசேகரன் (விஷ்ணு கரன்ஸ் சுன்னாகம்), வாசுகி (லண்டன்), வரதராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியா பண்டாரிக்குளம் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சந்திரசேகரன் - (மருமகன்)
புஸ்பமலர் - (மகள்)

*ஐயனார் கோயிலடி,*
*சுன்னாகம்.* (89419)

# முஷாரப்பின் இந்தியப் பயணத்துக்கு
# பாகிஸ்தானிய எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு!
## அமைதிப் பேச்சுக்கு பின்னடைவு

இஸ்லாமாபாத்,ஜூன்28

**பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் இந்தியா சென்று பேச்சு நடத்துவதற்கு அந்த நாட்டின் 19 கட்சிகள் அடங்கிய பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக மீட்புக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.**


தனது இந்தியப் பயணம் குறித்து விவாதிக்க அதிபர் முஷாரப் நேற்றுக் கூட்டியிருந்த அனைத்துக் கட்சிகள் கூட்டத்தை ஜனநாயக மீட்புக் கூட்டணி புறக்கணித்துள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்களான பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியும் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளன. பாகிஸ்தானின் பிரதான கட்சிகளான இவை இரண்டும் இடம்பெற்றுள்ள கூட்டணி முஷாரபபின் இந்தியப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதால் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் முஷாரப் நடத்த உள்ள பேச்சுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.



நாட்டின் சார்பாக உயர் நிலைச் சந்திப்புகளை நடத்தும் அதிகாரம் முஷாரப்புக்கு கிடையாது என்றும் - அதனாலேயே தமது கூட்டணி முஷாரப்பின் இந்தியப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகவும் -

ஜனநாயக மீட்புக் கூட்டணியின் தலைவர் நவாஸ் தாதா நஸ்ருல்லாகான் தெரிவித்துள்ளார். (ஓ)




**பிறேசிலில் சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட கைத்துப்பாக்கிகள் உட்பட சுமார் ஒரு இலட்சம் சிறிய ரக ஆயுதங்கள் ரியோ டிஜெனிரோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை, 'புல்டோசர்' வாகனத்தால் நசுக்கி அழிக்கப்பட்டபோது எடுத்த படம். ஒரேநாளில் இவ்வளவு தொகையான ஆயுதங்கள் அழிக்கப்படுவது உலகில் இதுவே முதல் தடவை என்று கூறப்படுகின்றது.**

# மலேசிய பாடசாலை ஆசிரியைகள் கர்ப்பத்தைத் திட்டமிடக் கோரிக்கை

கோலாலம்பூர்,ஜூன்28

மலேசியாவில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதால் ஆசிரியைகள் கர்ப்பம் தரிப்பதைத் திட்டமிட்டு, வகுப்புகள் பாதிக்கப்படுவதைத் தடுக்குமாறு மலேசிய கல்வி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மலேசிய உதவிக் கல்வி அமைச்சர் ஆஷிஷ் சம்சுதீன் இந்த வேண்கோளை வெளியிட்டார்.

ஒரு பாடசாலையில் பணியாற்றும் தலைமையாசிரியை மற்றும் ஆசிரியைகளில், ஒரே காலத்தில் பலர் கர்ப்பம் தரித்து விடுமுறையில் சென்றால், வகுப்புகள் பாதிக்கப்படுவதாகவும் -

ஆகவே, ஒவ்வொரு பாடசாலைகளிலும், ஆசிரியைகள் தங்களுக்குள் கூடிப்பேசி, ஒரே சமயத்தில் கர்ப்பம் தரிக்காது திட்டமிட்டு தவிர்க்கும்படியும் -

உதவிக் கல்வி அமைச்சர் கோரியுள்ளார்.

அத்துடன் பாடசாலை தவணை விடுமுறை நாள்களில் பிரசவம் நிகழக் கூடியவாறு, கர்ப்பம் தரிப்பதைத் திட்டமிடுமாறும் ஆசிரியைகளை உதவி அமைச்சர் சம்சுதீன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மலேசியாவில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களில் 65சத வீதத்தினர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# இந்தியா – பாகிஸ்தான் இணைந்து நடத்தும் கிரிக்கெட் போட்டி

புதுடில்லி,ஜூன்28

நான்கு நாடுகள் பங்குபற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை அடுத்த ஆண்டு இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து நடத்தவுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

உலக அரங்கில்

சிம்பாப்வே மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றின் கிரிக்கெட் அணிகள் இந்திய, பாகிஸ்தான் அணிகளுடன் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இந்தப் போட்டிக்கான 13 ஆட்டங்களும், அடுத்த ஆண்டு, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ளன.

முன்னர் கனடா மற்றும் ஷார்ஜாவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் பாகிஸ்தான் அணி கலந்துகொள்வதைக் காரணம் காட்டி, அவற்றில் பங்குபற்ற தனது நாட்டு கிரிக்கெட் அணிக்கு இந்திய அரசு அனுமதி மறுத்திருந்தது.

ஆனால் தற்போது இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு நடத்தும் அளவுக்கு சுமுகநிலை தோன்றியிருப்பதாலேயே, இரு நாடுகளும் இணைந்து கிரிக்கெட் போட்டியை நடத்துகின்றன. (ஓ-9)

### ஆட்சிக்கு வந்த ஒன்றரை மாதத்தில்
# தமிழக அமைச்சரவையில் இரண்டாவது தடவை மாற்றம்

சென்னை,ஜூன்28

தமிழக அமைச்சரவையிலிருந்து மேலும் ஒரு அமைச்சர் நீக்கப்பட்டுள்ளார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த ஏ.வெங்கடாசலம் விலக்கப்பட்டு இந்தத் துறைக்கு புதிய அமைச்சராக திருமதி வளர்மதி ஜெபராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏ.வெங்கடாசலம் அமைச்சர் பொறுப்பில்இருந்து நீக்கப்பட்டதுக்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை.

நேற்று முன்தினம் திடீரென்று ஆளுநர் மாளிகைக்குச் சென்ற முதல்வர் ஜெயலலிதா, தமிழக ஆளுநர் பாத்திமா பீவியிடம் அமைச்சரவை மாற்றம் குறித்து கடிதத்தை கையளித்தார்.

அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்று ஒன்றரை மாத காலத்தில், அமைச்சரவையில் செய்யப்படும் இரண்டாவது மாற்றம் இதுவாகும்.

ஏற்கனவே 3 அமைச்சர்கள் நீக்கப்பட்டு, வேறு 3 புதியவர்கள் அமைசசர்களாக்கப்பட்டது தெரிந்ததே. (ஓ-4)

### மனித சமுதாயத்துக்கு அழிவை ஏற்படுத்தும்
# குளோனிங் முறையைத் தடைசெய்ய பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கோரிக்கை

லண்டன்,ஜூன்28

குளோனிங் முறை மூலம் மனித இனப்பெருக்கம் செய்வதற்கு தடை விதிக்கும்படி பிரிட்டிஷ் பிறப்புரிமையியல் விஞ்ஞானிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுவரை விலங்குகளில் மேற்கொள்ளப்பட்ட குளோனிங் முறை இனப்பெருக்கப் பரிசோதனைகளில் பெற்ற அனுபவங்கள், இந்த முறையினால் மனித சமுதாயத்துக்கு பேராபத்தை ஏற்படுத்தும் சாத்தியங்கள் அதிகமிருப்பதை உணர்த்தியுள்ளதாகவும் -

மனித குலத்தை நாசம் செய்யக் கூடியவர்களை மீண்டும் பிறப்பாக்கம் செய்யக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

மனித சமுதாயத்துக்கு பாரிய அச்சுறுத்தலாக இது அமையுமென்றும் -

பிரிட்டிஷ் ரோயல் சமூக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

மனித இனப்பெருக்கத்துக்கு குளோனிங் முறையைப் பிரயோகிக்க சர்வதேச ரீதியாகத் தடை விதிக்க வேண்டும் என்றும் -

மருத்துவ நோக்கங்களுக்காக குளோனிங் முறை பயன்படுத்தப்படுவதை இது தடுக்காது என்றும் -

இதன் காரணமாகத் தடைக்கான ஆதரவைப் பெறுவதில் சிரமமிருக்காது என்றும் - விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குளோனிங் மூலம் உடலியல் ரீதியாக முற்றிலும் ஒருவரையொத்த இன்னுமொரு மனிதனை உருவாக்க முடியுமானாலும், ஆளுமை, சிந்தனை போன்றவற்றில் அவர்களிடையே சில வேறுபாடுகள் காணப்படும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (ஓ)

### மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில்
# சிறையில் அடைத்தால் உண்ணாவிரதம்; முன்னாள் உளவுத் தலைவர் எச்சரிக்கை!

லிமா,ஜூன்28

இராணுவச் சிறையில் தன்னை அடைக்கக் கூடாதென்றும் -

மீறி அடைக்கப்பட்டால், சிறையில் தான் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாகவும் -

பெருவின் முன்னாள் உளவுத் துறைத் தலைவர் விளாமிடிரோ மொன்டசினோஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிஜிமோரி பெருவின் அதிபராகப் பதவி வகித்தபோது, அவரது வலது கரமாக இருந்த மொன்டசினோஸ், பல மனித உரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டது சம்பந்தமாக, அவர் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் அவர் இராணுவச் சிறையில் அடைக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகவே மொன்டசினோஸ் உண்ணாவிரத எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேசமயம், மொன்டசினோஸின் எச்சரிக்கை பற்றி தான் கூற எதுவுமில்லை என்று தெரிவித்த பெரு ஜனாதிபதி டொலெடோ, சட்ட நடவடிக்கைகளில் தான் தலையிடப் போவதில்லையென்றும் கூறியுள்ளார்.

தன் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வதைத் தவிர்க்க நாட்டைவிட்டுத் தப்பிச் சென்ற மொன்டசினோஸ், சமீபத்தில் வெனிசூலாவில், அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பெருவின் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஓ)

### 1000 கடத்தல்காரர்கள் ஈரானில் சுட்டுக்கொலை!

தெஹ்ரான், ஜூன்28

ஈரானிய பாதுகாப்புப் படையினர், கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த ஒரு வருட காலப் பகுதியில் போதை மருந்துக் கடத்தல்காரர்கள் ஆயிரம் பேரைத் தாம் சுட்டுக் கொன்றுள்ளதாகவும் -

இதேகாலப் பகுதியில் போதை மருந்துக் கடத்தல்காரர்களுடன் இடம்பெற்ற மோதல்களில் 142 இராணுவத்தினர் பலியானதாகவும் - அறிவித்துள்ளனர். (ஓ-9)

### ஈராக் மீதான தடைக்கு ரஷ்யா எதிர்ப்பு

ஈராக் மீது மேலும் அதிகப் பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்துவதற்கான அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தீர்மானத்தை ரஷ்யா நிராகரித்ததை ஈராக் வரவேற்றுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை ரஷ்யா அனுமதிக்காது என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சமீபத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

# தென்கிழக்கு தைவானில் நேற்று முன்தினம் பூமியதிர்ச்சி

தைவானின் தென்கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஜிஜு நகரில் இருந்து 22 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிச்டேர் அளவுகோலில் ஐந்தாகப் பதிவாகியது.

நிலநடுக்கத்தால் பாரிய சேதங்கள் எவையும் ஏற்படவில்லை.

கடந்த 14 ஆம் திகதி தைவானின தென்கிழக்குப் பகுதியில் ரிச்டேர் அளவுகோலில் 6.2 ஆகப் பதிவான பூகம்பத்தில் சிறியளவு சேதமே ஏற்பட்டது.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஏற்பட்ட 7.2 ரிச்டேர் அளவிலான நிலநடுக்கத்தில் இரண்டாயிரத்து நானூறு பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# முன்னாள் அமைச்சர் பொன்முடி தமிழகப் பொலிஸாரால் கைது!

சென்னை,ஜூன்28

முன்னாள் அமைச்சரும் தமிழக சட்டப் பேரவையின் தி.மு.க. உறுப்பினருமான பொன்முடி நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விழுப்புரத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அரிசிக் களஞ்சியத்தில் நுழைந்து, அங்கு பணியாற்றிய அரசு ஊழியர்களை மிரட்டியதாகப் பொன்முடி மீது வழககுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவருடன் தி.மு.கவைச் சேர்ந்த மேலும் 29 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.


பொன்முடி

முன்னதாக சம்பந்தப்பட்ட அரிசிக் களஞ்சியத்தில் பொன்முடி திடீர் சோதனை நடத்தியிருந்தார்.

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது களஞ்சியங்களில் சேமிக்கப்பட்டிருப்பது பழுதடைந்த அரிசியே என்று முதல்வர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியதை அடுத்தே சட்டப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் தான் சோதனை நடத்தியதாக பொன்முடி தெரிவித்துள்ளார். (ஓ-9)

# நீர்யானை தாக்கி ஒருவர் மரணம்!

கேப்டவுன், ஜூன்28

தென்னாபிரிக்காவில் நீர்யானை ஒன்று தாக்கியதில் ஹோட்டல் ஒன்றின் பணியாளர் ஒருவர் மரணமானார்.

ஹோட்டல் தடாகத்தில் வளர்க்கப்பட்ட நீர்யானையை பராமரித்துக் கொண்டிருந்த பணியாளரைத் திடீரென்று அந்த நீர்யானை துரத்தித் தாக்கிக் கொன்றது.

பின்னர் அந்த நீர்யானையை கட்டுப்படுத்துவதற்காக, மயக்க மருந்து செலுத்தப்பட்டபோது, அது இறந்துவிட்டது.

பொதுவாக நீர்யானைகள் சாதுவான பிராணிகளாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## கைதான பெரும்பான்மை இனத்தவர்களை விடுவிக்கக் கோரி

# நீர்கொழும்புபொலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

### இராணுவம் - பொலீஸ் கடற்கரை வீதியில் கூட்டுரோந்து

கொழும்பு, ஜூன் 28

நீர்கொழும்பு கடற்கரை வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஐவரை விடுதலை செய்யக் கோரி கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பெருமளவானோர்நீர்கொழும்பு பொலீஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நீர்கொழும்பு குடாப்பாடு பகுதியில் இடம்பெற்ற இசைக் கச்சேரியில் கலந்து கொண்ட தமிழ் — சிங்கள இளைஞர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் பெரும்பான்மை இன இளைஞர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்கானதையடுத்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கடற்கரை வீதிப் பகுதியில் உள்ள தமிழர்களின் பல கடைகள் சிங்கள இளைஞர்களினாலும், காடையர் கும்பல்களினாலும் அடித்து நொறுக்கப்பட்டன.

இதையடுத்து, இந்த இன முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நீர்கொழும்புப் பொலீஸாரும், அப்பகுதியைச் சேர்ந்த மதப்பெரியார்களும் நேற்று முன்தினம் காலை விசேட ஒன்று கூடல் ஒன்றை ஏற்பாடு செய்து, இனிமேல் இப்பகுதியில் இன வன்முறைகள் தலைதூக்குவதற்கு இடமளிக்கக் கூடாதெனவும் இரு சமூகத்தவரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரு சாராரும் அமைதி பேணுவதற்கு உடன்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில்நீர்கொழும்புப்பொலீஸ் நிலையத்தை முற்றுகையிட்ட பெருமளவு சிங்கள மீனவர்கள் மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள ஐவரையும் உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும் என வற்புறுத்தினர். எனினும் பொலீஸார் அதனை மறுக்கவே அங்கு மோதல் நிலையொன்று உருவாகியது.

ஒருவாறு இந்த நிலைமை தவிர்க்கப்பட்ட போது அங்கிருந்து வெளியேறிய அந்தக் கூட்டம் அருகிலுள்ள தேவாலயத்திற்குச் சென்று மணியொலி எழுப்பி அப்பகுதி மக்களைத் தேவாலயத்திற்கு அழைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் பொலீஸார் விடுதலை செய்யாவிடின் நிலைமை மோசமாகுமென எச்சரித்ததுடன் தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தாங்கள் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டி வரும் எனவும் கடுமையாகக் கூறியுள்ளனர்.

அதை அடுத்து அப்பகுதிக்கு இராணுவத்தினரும் மேலதிகப் பொலீஸாரும் வரவழைக்கப்பட்டு கடற்கரை வீதிப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் படையினரும் பொலீஸாரும் அப்பகுதியில் கூட்டாக ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க)

## சிறுபான்மைக்கட்சிகள் அங்கம் வகிக்காத

# தேசிய அரசு நிறுவப்பட்டால் விபரீதமான நிலையே ஏற்படும்

### அமைச்சர் ஜயரத்ன எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 28

சிறுபான்மை அரசியல் கட்சிகளை ஓரம்கட்டிவிட்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ. தே. கட்சியும் இணைந்து தேசிய அரசு ஒன்று நிறுவப்பட்டால், நாட்டில் விபரீதமான நிலைமையே ஏற்படும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளர்நாயகமும், அமைச்சருமான டி.எம். ஜயரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்த பின்னர் சுதந்திரக் கட்சியும், ஐ. தே, கட்சியும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற யோசனையை எதிர்ப்பதாகவும் அவர் சொன்னார்.

சிறுபான்மை அரசியல் கட்சிகள் அரசில் அங்கம் வகிக்காவிட்டால் நாட்டில் சமாதானம் ஒருபோதும் ஏற்படமாட்டாது. சிறுபான்மை மக்களை ஓரம் கட்டிவிட்டு தேசிய அரசு அமைத்தால் நாட்டில் அமைதியின்மை தோன்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

(க-3-9)

## ஏறாவூரில் கோஷ்டி மோதல்:

# கிரனேட் வீச்சில் ஒருவர் பலி; 19 முஸ்லிம்கள் காயமுற்றனர்

கொழும்பு, ஜூன் 28

ஏறாவூர் பெண் சந்தை வீதி றகுமானியா மகாவித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்ற கோஷ்டி மோதலின்போது இனம் தெரியாத நபர் ஒருவர் கிரனேட் குண்டு ஒன்றை வீசியதால் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 19 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

முகம்மட்கயிட் (வயது 45) என்பவரே கொல்லப்பட்டவராவார். காயமடைந்தவர்களில் சிறுமி ஒருவர் உட்பட மூன்று பெண்களும் அடங்குவர். காயமுற்ற அனைவரும் முஸ்லிம்கள் ஆவர். (க)


Sixth Year Rememberance

28–06–2001



Swaminathan Balachandran

B. Sc. Dip - in Edu. (Cey)

(Director, Undergraduate Department &
Retd. Teacher, Jaffna College-Vaddukoddai)

What a happy family we were together & There one fine day the light of the family was Gone.
The tears in my eyes could wipe away. But the Pain and ache in my heart will never fade away.

Your ever loving wife.
Grace B.

32, Palam Road.
Kandermadam

(89465)


# அகதி மக்களின் குடிசைகளை திருத்த நிதி ஒதுக்கீடு இல்லை

## முல்லைத்தீவு அரச செயலகம் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் குடிசை வீடுகளை வேய்ந்து புனரமைப்பதற்காக இந்த வருடம் நிதி ஒதுக்கப்படவில்லை என்று முல்லைத்தீவு அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடம்பெயர்ந்த மக்களின் குடிசைகளைப் புனரமைக்க வருடாவருடம் அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றது என்றும் —

கடந்த வருடம் 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது என்றும் —

இவ்வாண்டு இந்தத் திட்டத்துக்கு நிதி கோரப்பட்ட போதும், இதுவரை கிடைக்கவில்லை என்றும் — செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிதி உதவி கிடைக்காததால் புதுக்குடியிருப்பு குடியேற்றத் திட்டத்தில் உள்ள 38 குடிசைகளைப் புனரமைக்க முடியாதுள்ளது என்றும் —

அந்தக் குடிசைகள் கூரைகள் இன்றிக் காணப்படுகின்றன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(க-3)

# தடை விதித்த பொருள்களுடன் கடற்படையிடம் படகு சிக்கியது

### மன்னார்க் கடலில் சம்பவம்

மன்னார், ஜூன் 28

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களானசைக்கிள் உதிரிப்பாகங்கள், சிமெந்து ஆகியவற்றை எடுத்துச்சென்ற படகு ஒன்றை கடந்த திங்களன்று மன்னார்க் கடற்பகுதியில் கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படகில் இருந்த நால்வரைக்கைது செய்து மன்னார்ப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த நால்வரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(க-3)

## சங்கானை பிரதேச செயலர் பிரிவில்

# 19 அபிவிருத்திப் பணிகளுக்கு 179 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 28

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 19 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக 179 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத்திட்டத்தில் இருந்து இந்தத் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கும்படி தாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டுள்ளதாகவும் —

அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்க அவர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் — வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் தெரிவித்தார்.

திட்டங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்படவிருக்கும் நிதி விவரமும் வருமாறு:-

★ அராலி வடக்கு சனசமூக நிலையம் — 50 ஆயிரம் ரூபா.

★ அராலி ஆவரம்பிட்டி அம்மன் ஆலயம் — ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ பண்ணாகம் விசவர்த்தனை முருகமூர்த்தி ஆலயம்— ஒரு லட்சம் ரூபா.

★ சுழிபுரம் பெரிய புலோவைரவர் ஆலயம் — ஒரு லட்சம் ரூபா.

★ சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயம்— ஒரு லட்சம் ரூபா.

★ அராலி மேற்கு ச. ச நிலையம்— 50 ஆயிரம் ரூபா.

★ சங்கரத்தை வீரபத்திரர் சமேத பத்திரகாளி ஆலயம்— ஒரு லட்சம் ரூபா.

★ புதரானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்— ஒரு லட்சம் ரூபா.

★ சித்தன்கேணி பெரிய வளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் ஆலயம் — ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா.

★ அராலி வடக்கு பெரிய தம்பிரான் ஆலயம்— 50 ஆயிரம் ரூபா.

★ சுழிபுரம் கல்வேம்படி கலைவாணி ச. ச நிலையம்— 50 ஆயிரம் ரூபா.

★ வட்டுக்கோட்டை பேச்சி அம்மன் ஆலயம்— 50 ஆயிரம் ரூபா.

★ சித்தன்கேணி கலைவாணி வைரவர் ஆலயம்— 50 ஆயிரம் ரூபா.

★ வட்டு.மேற்குவாலையம்மன் கோயில்— ஒரு லட்சம் ரூபா.

★ சித்தன்கேணியில் உள்ள கேணி— இரண்டு லட்சம் ரூபா.

★ சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்— இரண்டு லட்சம் ரூபா.

★ வட்டுக்கோட்டை அம்பாள் ச. ச நிலையம்— 60 ஆயிரம் ரூபா.

★ அராலி தெற்கு களவத்துறை ச. ச நிலையம்— 80 ஆயிரம் ரூபா.

★ கொட்டியாவத்தை கலைவாணி ச. ச நிலையம்— 50 ஆயிரம் ரூபா.

(க-3)

# அடுத்த வாரம் தெற்கில் மின்வெட்டு

கொழும்பு, ஜூன் 28

நீரேந்துப் பகுதிகளில் போதியளவு மழை பெய்யாத காரணத்தினால் அடுத்த வாரம் முதல் மின்வெட்டை நடைமுறைப்படுத்த இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

தினமும் ஒன்று முதல் ஒன்றரை மணிநேரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த மின்வெட்டு நீரேந்துப் பகுதிகளில் கூடுதலானளவு மழைபெய்யும்வரை தொடருமென்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் டி. வி. டி. சி. விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம் வழமைக்குத் திரும்பும் வரை கூடுதலானளவு அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(க)

# மின்தொழிலாளி கம்பத்திலிருந்து விழுந்து படுகாயம்

யாழ்ப்பாணம்,. ஜூன் 28

பருத்தித்துறை — யாழ்ப்பாணம் வீதியில், பருத்தித்துறை சிவன்கோயில் பகுதியில், மின்சார விநியோக வயர்களைக் கழற்ற மின் கம்பத்தில் ஏறிய மின் தொழிலாளி ஒருவர் கீழே விழுந்து, கால் தொடைப் பகுதி முறிவடைந்து படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில், மின்தொழிலாளியான துன்னாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் முருகேஸ்வரன் (வயது 49) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

சிவன்கோயில் தேர் உற்சவத்துக்கான தேர் வீதியுலா வருவதற்கு வசதியாகத் தேர் மட்டத்திற்குக் கீழாக இணைக்கப்பட்டிருந்த மின் வயர்களைக் கழற்றுவதற்காக ஏறிய வேளையிலேயே அவர் விழுந்து காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)

## உதயன்

### பழைய பல்லவி

"நாயக்குக் கல்லெறி எங்கு பட்டாலும் காலைத் தான் நொண்டிக் கொண்டு ஓடும்"-என்பார்கள்.

பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் எப்போதும் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்க்கும் போது இதுதான் நினைவுக்கு வருகின்றது.

அதிகாரம், தேர்தல், மக்கள் செல்வாக்கு என்று ஆட்சி விவகாரத்தில் பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் இரண்டுக்கும் இடையே போட்டி வந்துவிட்டால், அவர்கள் தூக்கிப் போட்டு நசிப்பதே சிறுபான்மையினரைத்தான்.

ஆட்சிப்பீடம் ஏறுவதற்குக் குறுக்கு வழியை நாடிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, தமிழ் மக்களை நசிப்பதன் மூலம் சிங்கள மக்களிடம் செல்வாக்குத் தேடலாம் என்று நம்பினார்; செயற்படுத்தினார். 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டுமே என்ற சட்டத்திற்கான எண்ணக்கரு பிறந்து, நடைமுறைப்படுத்தப்பட்டது.

சிறிமாவோ, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சந்திரிகா வழியாக இதுதான் இன்றும் தொடர்கதையாகின்றது.

மீண்டும் இப்போது ஆட்சிக் கதிரைப்போட்டி பிறந்திருக்கின்றது. அம்மாவின் ஆட்சிக்கு முண்டு கொடுத்த முஸ்லிம் காங்கிரஸின் அணி, அரசில் இருந்து வெளியேற்றப்பட்டுவிட்டது; அல்லது வெளியேறிவிட்டது. இப்போது ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மீண்டும் போட்டி.

பிறகென்ன? பதவிக் கதிரையைக் கைப்பற்ற அல்லது தக்கவைக்க வழமைபோல் சிறுபான்மைத் தமிழரை நசுக்கும் நாடகம் ஆரம்பமாகிவிட்டது.

இன்று தமிழர் தேசியத்தின் குறியீடாக விளங்குபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்களைத் தாங்கள் நசுக்குபவர்கள் போலவும், மற்றைய தரப்பினர் அவர்களை ஆதரிப்பவர்கள் போலவும் காட்டுவதன் மூலம் சிங்களப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கைப் பெருக்கவும், நிலைநிறுத்தவும் ஆட்சிக் கட்டைக் கைப்பற்றவும் வலை விரிக்கின்றன பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும்.

அதன் விளைவுதான்-ஒரு சாரார் மற்றைய சாராரைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி வெளியிடும் செய்திகள், தகவல்கள், அறிக்கைகள்.

புலிகள் மீதான தடையை நீக்குவோம் என்று உறுதிமொழியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கித்தான், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக அக்கட்சிகளை ஐ.தே.கட்சி வளைத்துப் போட்டது என்று குற்றம் சுமத்துகின்றது பொ.ஐ.முன்னணி. அந்தச் சாரப்பட பரபரப்பான செய்திகள் அரசு சார்பு செய்தி ஊடகங்களினால் சிங்களப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் திட்டமிட்டுப் பெரியளவில் பரப்பப்பட்டு வருகின்றன.

இதேபோன்று -

இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரம் தொடர்பாகக் கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்தபோது, புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாகத் தன்னுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா ரணில் விக்கிரமசிங்கவை வற்புறுத்தினார் என்று வேறு பத்திரிகைகளில் பரபரப்புச் செய்தி வெளியிடப்பட்டது.

இதன் மூலம், ஏதோ சந்திரிகா புலிகள் சார்பானவர் என்பது போலவும், அந்த நிலைப்பாட்டைப் பின்பற்றும்படி ரணிலை அவர் வற்புறுத்துகின்றார் என்பது போலவும் காட்டுவதற்கு மறுதரப்பில் முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால் - ஜனாதிபதி ச்ந்திரிகாவின் தரப்பில் - அரசுத் தரப்பில் - இதற்கு ஒருபடி மேலே போய் -

புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து இணக்கம் எதையும் ஜனாதிபதியோ, அரசோ ஐ.தே.கட்சித் தலைவரிடம் தெரிவிக்கவில்லை என்றும் -

புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று ரணில்தான் ஜனாதிபதியிடம் யோசனை தெரிவித்திருந்தார் என்றும் - அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஆக, ஒன்றுமட்டும் நிச்சயம். தாங்கள் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு அல்லது ஆட்சிப்பீடத்தைத் தக்கவைப்பதற்கு சிறுபான்மைத் தமிழரை மிதிக்கும் தங்கள் வழமையான செயற்பாட்டை பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் இரண்டும் கைவிடமாட்டா என்பதுதான் அது.

## கொழும்புத்துறை மக்களுக்கு நஷ்டஈடு பெற்றுத்தருமாறு இந்து இளைஞர் மன்றம் மகஜர்

அரியாலை,ஜூன்28

சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் கொழும்புத்துறை பிரதேச மக்களுக்கு நஷ்டஈட்டை பெற்றுத்தருமாறு கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் கோரிக்கைவிடுத்துள்ளது.

கொழும்புத்துறை பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து தற்போது எதிர் நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க் கிழமை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து மேற்கண்ட கோரிக்கைகள் சம்பந்தமான மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

கொழும்புத்துறை பிரதேச மக்கள் சென்ற ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் சொத்துக்களையும் உயிர்களையும் இழந்துள்ளனர். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இந்த மக்களின் வாழ்விடங்களும் ஷெல் தாக்குதலினால் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பல்வேறு பகுதிகளிலும் பலதரப்பட்ட துன்ப துயரங்களுக்கு மத்தியில் முகங்கொடுத்து வாழ்ந்து வருகின்றனர்.

ஆகையினால் இப்பிரதேச மக்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான நஷ்டஈட்டைப் பெற்றுத்தருமாறு அமைச்சருக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்புத்துறை கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அன்றையதினம் அமைச்சரைச் சந்தித்து இப்பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-17)

## நாட்டு நடப்பு

மொட்டையர் ஆளோ கட்டை
முழுதுமாய்த் திருநீற்றுப் பட்டை
கொட்டையால் மாலை இரண்டு
கட்டியதோ காவிப் பட்டு
பக்கத்துக் கிணத்தருகே சாமி
பக்குவமாய்க் கழட்டி வைத்து
முக்காலே மூன்றுவாளி தண்ணி
முழுதுமாய்க் குளித்து விட்டு
பக்கத்துக் கொட்டில் பூந்தார்
பருகினார் புளித்த கள்ளு.

*- விகடகவி -*

## தமிழ்ப் பெண்களுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை என்பதை உலகத்திற்கு உணர்த்திவிட்டது மருதானைச் சம்பவம்

### தமிழ் அரசியல் கட்சிகள் கடுமையாகக் கண்டனம்

கொழும்பு, ஜூன்28

தலைநகர் கொழும்பில் தமிழ்ப் பெண் ஒருவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை பொலீஸாரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவத்திற்கு தமிழ் அரசியல்கட்சிகள் கடுங்கண்டனம் தெரிவித்துள்ளன.

மருதானைச் சோதனைச் சாவடியில் வைத்துத் தமிழ்ப் பெண் ஒருவர் மிருகத்தனமான முறையில் பொலீஸாரினால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை இந்நாட்டில் தமிழ்ப் பெண்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லையென்பதை வெளிப்படையாக உலகத்திற்கு உணர்த்தி இருப்பதாகவும் அக்கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, மருதானை பொலீஸ் சாவடியில் வைத்து மலையக தமிழப் பெண் ஒருவர் பொலீஸார் மூவரினால் மிருகத்தனமான முறையில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டது மிலேச்சத்தனமான செயலாகும். இக்கொடூரச் செயலை புரிந்தவர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் பொலஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பொலீஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்-

கடந்த ஞாயிறன்று இரவு வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருநத இளம் மலையகத் தமிழ்ப் பெண்ணைச் சோதனையிட வேண்டும் எனச் கூறி மருதானை பொலீஸ் சோதனைச் சாவடிக்குக் கூட்டிச் சென்ற மூன்று பொலீஸார் அப் பெண்ணை மிகவும் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். இது ஓர் அநாகரிகமான, காட்டு மிராண்டித்தன செயலாகும். தமிழ்ப் பெண்கள் தலைநகரில் தலைநிமிர்ந்து நடக்க முடியாது என்பதை மேன்மேலும் உறுதிப்படுத்துவதாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது.

தமது சொந்தஇடத்தில் தொழில் இல்லாமல் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகக் கொழும்பில் வேலைக்கு வந்த இந்த 28 வயதான பெண் இரண்டு பிள்ளைகளுக்குத் தாய் ஆவார். தமிழ்ப் பெண்கள் வெளியில் நடமாடாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று - குறிப்பிடப்பட்டுள்ளது.

#### சந்திரசேகரன்

தமிழ் யுவதி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் பாதுகாப்புத் துறையினரின் இழிவான செயல்களுக்கு இன்னுமொரு உதாரணமாக அமைந்துள்ளது. பாதுகாப்புத்துறைக்குப் பொறுப்பானவர் என்ற வகையில் இந்தச் சம்பவத்துக்கு பதில் சொல்ல வேண்டிய தார்மீகப் பொறுப்பு தங்களையே சாரும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகரன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற வழமையான வசனத்தை உங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இத்தகைய தங்களின் உத்தரவாதம் காற்றில் பறக்க விடப்பட்டமைக்கு எத்தனையோ உதாரணங்களை எடுத்துச் சொல்ல முடியும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### ஜோசப் பரராஜசிங்கம்

ஒரு பெண் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தளபதியாகவும் இருக்கும் நிலையில் தமிழ்ப் பெண்களுக்கெதிராகத் தொடர்ச்சியாகப் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் ஈடுபடும் அரச படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது கவலைக்குரிய விடயமாகும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.(க)

## சாயிசிந்தனை



### பிடிக்கவில்லை என்றால் ஒதுங்கிவிடுங்கள்

அடக்கமும் பணிவும் இன்றி உங்கள் நடவடிக்கைகள் அமையுமானால் நிச்சயம் முன்னேற முடியாது!

வாழ்க்கையில் முக்கியமானது பணிவும் கீழ்ப்படிதலும், கல்வியின் சாரமே அதுதான்! அப்போதுதான் நீங்க்ள் உண்மையில் கற்றவர் எனக் கருதப்படுவீர்கள்!

இல்லையெனில் வாழ்க்கையின் இன்பங்களுக்காக நேரத்தைக் கழிக்கும் சாதாரண மனிதர்களாக மாறிப்போவீர்கள்! அதனால் பணிவை வளர்த்துக் கொள்ளுங்கள். ஆடம்பரமின்றி வாழக் கற்றுக்கொள்ளுங்கள். எந்தக் காரணம் கொண்டும். வெறுப்பு உங்களை ஆட்கொள்ள விடக்கூடாது.

எவருக்காவது நல்ல புள்ளிகள் கிடைத்தால் அதைப் பார்த்து அசூசைப்படக்கூடாது! யாராவது நன்றாக இருந்தால் பொறாமைப்படக் கூடாது. அந்த அசூசைக்கும் அகங்காரத்திற்கும் மூலகாரணம் சுயநலமே, சுயநலத்திற்கு இடம் கொடுத்தால் மற்றவை தானாக உள்ளே வந்துவிடுகின்றன.

மாணவர்களே! இறைவன் மேல் வைக்கும் அன்பே (பிரமையே) உங்கள் இதயங்களை அழகு செய்யும். யாரையும் வெறுக்காதீர்கள்! எவரையும் பிடிக்கவில்லையென்றால் பேசாமல் இருந்துவிடுங்கள்.

*(சனாதன சாரதி மார்ச் 1995)*

## ஆட்சி மாற்றம் குறித்து அக்கறையில்லை தமிழ் மக்கள் ஏற்கும் தீர்வே முக்கியம்!

### இந்தியத் தூதுவர் கூறியதாக பிரதி அமைச்சர் தகவல்

மட்டக்களப்பு,ஜூன்28

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதையிட்டு நாம் அக்கறை கொள்ளவில்லை. எந்த அரசாங்கமாயினும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை முன்வைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த விடயத்தில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது.

இவ்வாறு இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி தன்னிடம் தெரிவித்ததாக தேசிய ஒருமைப்பாடு, இன அலுவல்கள், கனிப்பொருள்வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி குறிப்பிட்டார்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் சொல்லமுடியாத துன்பங்களை அனுபவித்து வருவதை நான் நன்கு அறிவேன். எனவே பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணப்படவேண்டும். இதற்கு இரண்டு பகுதியினரும் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும்.

பேச்சுவார்த்தையின் மூலமாகவே தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு இந்திய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக உள்ளது என்றும் தூதுவர் தன்னிடம் கூறியதாகவும் கணேசமூர்த்தி கூறினார். (க)

## புரிந்துணர்வுப் பிரகடனத்தில் ஐ.தே.கவுடன் மூன்று தமிழ்க் கட்சிகள் கைச்சாத்து?

கொழும்பு,ஜூன்28

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் 3 தமிழ்க் கட்சிகளுக்குமிடையில் 'புரிந்துணர்வுப் பிரகடனம்' ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அரசசார்பு பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளும் கடந்த 21 ஆம் திகதி ஐ.தே.கட்சியுடன் இந்தப் 'புரிந்துணர்வுப் பிரகடனத்தில்' கையெழுத்திட்டுள்ளன.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடந்த கூட்டத்தில் வைத்து இந்தப் பிரகடனம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பின்வரும் நான்கு விடயங்களில் இந்தக் கட்சிகளிடையே புரிந்துணாவு ஏற்பட்டுள்ளது.

☆ வன்னிக்கான பொருளாதாரத் தடையை நீக்குவது.

☆ சண்டை தவிர்ப்பு.

☆ புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குதல்.

☆ சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தல். (க)


### நாளை

ஆனி 15
வெள்ளிக்கிழமை
திதி: நவமி
முன்னிரவு 10.33 வரை.
நட்சத்திரம் : அத்தம்
காலை 7.36 வரை.
சுபநேரம் : 5.56 - 7.26
ராகுகாலம் : 10.26 - 11.56
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நடந்தால் சுவர்க்கத்தை அடையலாம்;
பேச்சால் முடியாது.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!




## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2001
## வினாத்தாள் இல. - I
### பகுதி 1

தரம் 5 நேரம்:- 45 நிமிடம்

★ **01ஆம், 02ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருவத்தில் மிகவும் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**



01.காடு (1) (2) (3) (............)



02.பார்வை (1) (2) (3) (............)

★ **03 முதல் 05 வரையிலான வினாக்களில் கோடிடப்பட்டுள்ள பகுதிக்கு மிகவும் பொருத்தமான கருத்தைத் தரும் சொற்களை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

03. ஜோதினி சிரிக்கும் போது பற்கள் முத்துக்கள் போல் தெரிந்தன.
(1) மென்மையான (2) வெள்ளை நிறமான
(3) சக்திமிகுந்த (............)

04. பிரியந்தன் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றான்.
(1) பகற்காலத்தில் (2) இராக்காலத்தில்
(3) ஓய்வின்றி (............)

05. அமிர்தன் அகங்காரம் இல்லாத சிறுவன்.
(1) அழகு (2) ஆடம்பரம் (3) இறுமாப்பு (............)


★ **06 முதல் 10 வரையிலான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

06. பழங்களைச் சாப்பிடுவதற்கு முன்னர் கழுவிச் சாப்பிடவேண்டும். காரணம்:
(1) பழங்கள் இனிமையாக இருக்கும் என்பதால்.
(2) நோய்க்கிருமிகள், அழுக்குகள் இருக்கும் என்பதால்.
(3) சாப்பிடுவது இலகு என்பதால்.
(............)

07. பகலில் நட்சத்திரங்கள் தெரிவதில்லை. காரணம்:
(1) பகலில் வேறு இடத்திற்குச் சென்றுவிடும்.
(2) நட்சத்திரங்கள் பகலில் ஒளி இழந்து விடும்.
(3) சூரியனின் பிரகாசமான ஒளி அதனை மறைத்துவிடும்.
(............)


08. விறகு அடுப்புக்களில் சமைப்பது குறைந்துள்ளது. காரணம்:
(1) வேறு இலகுவான வழிகள் இருப்பதால் ஆகும்.
(2) விறகுத் தட்டுப்பாடு என்பதால் ஆகும்.
(3) விறகுப் புகையால் வீடு அசுத்தமாகும் என்பதால்.
(............)


09. எந்தக் கூட்டத்தில் மூன்று முக்கோணிகளும் இரண்டு வட்டங்களும் ஒரு சதுரமும் உள்ளன?



(1) (2) (3)
(............)

10. நான்கு பகுதிகளை ஒன்று சேர்ப்பதால் இவ் வடிவம் பெறப்படும். அந்த நான்கு பகுதிகளையும் கொண்ட கூட்டம்.





(1) (2) (3)
(............)

★ **கீழே ஐந்து மாணவிகளின் நிலைகள் வரிசையாகத் தரப்பட்டுள்ளன. அதன் கீழ் அவர்களது நிலைகள் மாற்றப்பட்ட விவரத்தினை வாசித்து அதற்கேற்ப சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**




மித்திரா சித்திரா வித்திகா நித்தியா சத்தியா

சத்தியா சித்திராவின் B இடத்திற்குச் செல்ல, வித்திகா சத்தியாவின் E இடத்திற்குச் சென்றாள். நித்தியா வித்திகாவின் C இடத்திற்குச் செல்ல சித்திரா நித்தியாவின் D இடத்திற்குச் சென்றாள்.

11. தனது நிலையை மாற்றாத மாணவி யார்?
(1) மித்திரா (2) சித்திரா (3) வித்திகா (4) நித்தியா (.........)

12. தற்போது சித்திராவின் இடது கை பக்கத்தில் நிற்பவர் யார்?
(1) சத்தியா (2) வித்திகா (3) நித்தியா (4) மித்திரா (.........)

13. நித்தியாவின் இரு பக்கத்திலும் அருகில் நிற்பவர்கள் யாவர்?
(1) சத்தியா, மித்திரா (2) சத்தியா, சித்திரா
(3) வித்திகா, சத்தியா (4) வித்திகா, சித்திரா (.........)

★ **கீழ்வரும் வினாக்களில் உள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் எப்போதும் உண்மையாக இருக்குமெனில் (✓) அடையாளத்தையும் எப்போதும் பொய் எனின் (✗) எனவும் சில வேளைகளில் மட்டும் உண்மையாக இருக்குமெனில் (0) எனவும் புள்ளிக் கோட்டின் மீது அடையாளமிடுக.**

14. சூரியன் மேற்கில் உதிக்கும். (..........)
15. காகம் கறுப்பு நிறம். (..........)
16. பெண்களை விட ஆண்கள் உயரமானவர்கள். (..........)
17. குருடர்களுக்குக் கண் தெரியாது. (..........)

★ **கீழ்வரும் வினாக்களில் சரியான ஒழுங்கு முறையில் உள்ள விடைகளின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

18. (1) கிராமம், மாவட்டம், நகரம், மாகாணம், நாடு.
(2) நகரம், கிராமம், மாவட்டம், நாடு, மாகாணம்.
(3) கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம், நாடு. (..........)

19. (1) மில்லிமீற்றர், மீற்றர், சென்ரிமீற்றர், கிலோமீற்றர்.
(2) மில்லிமீற்றர், சென்ரிமீற்றர், மீற்றர், கிலோமீற்றர்.
(3) மீற்றர், சென்ரிமீற்றர், மில்லிமீற்றர், கிலோமீற்றர். (..........)

20. (1) வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா.
(2) பொன்விழா, வெள்ளிவிழா, பவளவிழா, வைரவிழா.
(3) வெள்ளிவிழா, பொன்விழா, பவளவிழா, வைரவிழா.
(..........)


★ **கீழே மூன்று மாணவர்களின் விருப்புப் பாடங்கள் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| நிருத்திகா | நிவேதிகா | சுருதிகா |
|---|---|---|
| கணிதம் | சுற்றாடல் | ஆங்கிலம் |
| தமிழ் | கணிதம் | கணிதம் |
| விஞ்ஞானம் | தமிழ் | ஆக்கம் |
| சுற்றாடல் | விஞ்ஞானம் | அழகியல் |
| அழகியல் | ஆக்கம் | உடற்கல்வி |

21. மூவரும் விரும்பும் பாடம் எது? (..............................)
22. ஒருவர் மட்டும் விரும்பும் பாடம்/பாடங்கள் எது/எவை?
(..............................)
23. சர்வதேச மொழியாக விளங்கும் பாடத்தை யார் விரும்புகிறார்?
(..............................)
24. நிருத்திகாவும், சுருதிகாவும் மட்டும் விரும்பும் பாடம் எது?
(..............................)

★ **25-27 வரையிலான வினாக்களில் தரப்பட்ட உருக்களில் உள்ள கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்கு உரிய எண்ணை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

25.




(............)

26.

| | | |
|---|---|---|
| 2 | 4 | 8 |


| | | |
|---|---|---|
| 3 | 6 | 18 |

| | | |
|---|---|---|
| 4 | 3 | 12 |

| | | |
|---|---|---|
| 2 | 7 | |

(............)

27.




(............)


★ **28 - 30 வரையிலான வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

28. தரம் 5 இல் படிக்கும் ஜோதிகன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கோயிலுக்குச் செல்வான். 8ஆம் திகதி கோயிலுக்குச் சென்றால் அடுத்த எந்தத் திகதியில் அவன் கோயிலுக்குச் சென்றிருப்பான்?
(1) 14 (2) 15 (3) 16 (............)

29. என்னிடம் 25 ரூபா இருந்தது. தம்பியிடம் 10 ரூபா இருந்தது. அம்மா இன்று இருவருக்கும் சம பணம் தந்த போது தம்பியிடம் உள்ளதன் இருமடங்கு என்னிடம் வந்தது. அம்மா தந்த பணத்தின் பெறுமதி
(1) 20 ரூபா (2) 5 ரூபா (3) 15 ரூபா (..........)

30. எனது வீட்டில் பூமரங்கள் சில உள்ளன. எனக்கு செம்பருத்திப் பூவில் விருப்பம். எனது வீட்டில் செம்பருத்திப் பூ மரம் உண்டு. இக்கூற்று
(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது (..........)


31.



இக் கடிகார முகத்தில் 3.00மணியைக் காட்டும் போது அதனை முகம் பார்க்கும் கண்ணாடியினூடாக அவதானிப்பவர் உணரும் நேரம் யாது?

(1) 3.00மணி (2) 12மணி (3) 9மணி (..........)

32.



இந்த முப்பரிமாண திண்ம உருவிற்கு எத்தனை முகங்கள் உள்ளன?
(1) 6 (2) 8 (3) 10
(..........)

33. MEAT என்பதை 4 9 6 8 என எழுதப்பட்டால் TEAM என்பதை எழுதப்படும் விதம்

| | | | |
|---|---|---|---|
| 4 | 6 | 9 | 8 |

(1)

| | | |
|---|---|---|
| 8 | 9 | 6 |

(2)


34. கீழே உள்ளவற்றை ஒழுங்கு
சம்பவத்தை சரியாகத் தரும்
அ. படத்துக்கு நிறம் தீட்டிக் காய
ஆ. எனக்கு ஒரே அழுகை அழு
இ. சித்திர பாட ஆசிரியர் வீட்டு
ஈ. குட்டித் தம்பி என் சித்திரத்தி
போட்டான்.
உ. வரைதற் கொப்பியில் அழகான
(1) இ,உ,அ,ஈ,ஆ (2) இ,உ,ஈ,அ

★ **கீழ்வரும் குறியீடுகளால் காட்ட**
**இனங்கண்டு அக்குறியீடுகள் குறி**

| | | |
|---|---|---|
| MAP + | MVP - | 3 |
| MAP | PMC | 3 |
| 846 | 112 | 3 |


★ **கீழ்வருவனவற்றில் ஏதோ ஓர் அ**
**படத்தினை தெரிவு செய்து அதன்**
**எழுதுக.**

38.




(1) (2) (3)


39.



(1) (2) (3)



40. படத்தில்
கோட்டி
துண்டு
தோன்று



(1) (2) (3)

### பகுதி

★ **இப்பகுதியை வாசித்து இல. 1 மு**
**ளுக்கு விடை எழுதுக.**

பூதாதேவியைக் கௌவி மூடிக் செ
மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது
களை வாரி இறைத்தது போலப்
விண்மீன்களின் ஒளி குறையத் தொட
செக்கச் சிவந்து பிரகாசிக்கின்றது. க
கதிர்களைப் பூமாதேவியின் மீது மெ
கிழக்கு வானிலே முகிற் கூட்டங்
தகட்டைப் போல சூரியன் அசையத்
பகவானே வருக" எனச் சகல உ
கின்றன. தாமரை மலர்கள் தம் துணை
கின்றன. ஏனைய பல மலர்களும்

1. மேலே தரப்பட்ட பந்தியில் இயற்
எது? ..............................
2. இக்காட்சி இறந்தகாலத்திலா, எதிர்
எழுதப்பட்டுள்ளது? ..............................
3. எதன் பிரகாசம் குறைவதாகக் ச

★ **கீழே தரப்பட்டுள்ள சொற்களின் ஒ**
4.வைரங்களை .............................. 5. 6

★**ஒத்தகருத்துச் சொற்களை எழுது**
6. மலர்கள் .............................. 7. த

★**எதிர்க்கருத்துச் சொற்களை எழுது**
8. ஒளி - .............................. 9. கி
10. மேலே தரப்பட்ட பகுதியில் அ
துக. ..............................
11. மேலே தரப்பட்ட பகுதியில் மே
கூற்றை எழுதுக. ..............................
12. பின்வருவனவற்றில் பெயர்ச் செ
மெல்ல, சூரியன், தாம

★ **பிரித்து எழுதுக.**
13. முகமலர்ந்து - ..............................
14. முகிற்கூட்டம் - ..............................

**ஆங்கிலச் சொல்லை எழுதுக.**
15. சூரியன் -.............................. 16.
17. மலர்கள் - .............................. 18.

★ **கீழே பிறந்தநாள் வாழ்த்து பற்றி**
**அதனை வாசித்து 19-28 வரையி**
**எழுதுக.**

வளர்மதி வீதி, மட்டுவில்
வசிப்பிடமாகக் கொண்ட குணசிங்கம்
ஏக புதல்வன் வினோதன் தனது
03.02.2001 அன்று வியாழக்கிழமை அ
மான சுவிற்ஸலாந்தில் தனது இல்லத்

| 8 | 9 | 6 | 4 |
|---|---|---|---|

(2)

| 9 | 6 | 4 | 8 |
|---|---|---|---|

(3) (.............)

ஒழுங்குபடுத்தும் போது உருவாகும்
த் தரும் விடையைத் தெரிவு செய்க.
டிக் காய வைத்திருந்தேன்.
அழுகையாக வந்தது.
வீட்டு வேலை ஒன்று தந்தார்.
சித்திரத்தின் மீது மண்ணை அள்ளிப்

அழகான படம் ஒன்று வரைந்தேன்.
உ,ஈ,அ,ஆ (3) இ,அ,ஈ,உ,ஆ (..........)
ல் காட்டப்படும் கணித பிரசினத்தை
கள் குறிக்கும் எண்ணை எழுதுக.

35. M= ...........
36. C = ...........
37. V = ...........

ா ஓர் அம்சத்தால் பொருத்தமில்லாத
து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில்



(3) (4) (5)


(................)



(3) (4) (5)

(............)

படத்தில் காட்டப்பட்டவாறு புள்ளிக் கோட்டின் வழியே மடித்து வட்டத் துண்டு வெட்டிய பின் விரித்தால் தோன்றும் உருவம் எது?



(4) (...........)

**பகுதி -2**

**நேரம்:- 1மணி 15 நிமிடம்**

**இல. 1 முதல் 80 வரையுள்ள வினாக்க**

மூடிக் கொண்டிருந்த காரிருள் மெல்ல
ருக்கிறது. உச்சி வானத்தில் வைரங்
போலப் பிரகாசித்துக் கொண்டிருந்த
பத் தொடங்குகின்றன. கிழக்கு வானம்
ன்றது. கதிரவன் தனது பொன்மயமான
மீது மெல்ல மெல்லப் படரவிடுகிறான்.
கூட்டங்களுக்கு மத்தியில் தங்கத்
அசையத் தொடங்குகின்றான். "சூரிய
சகல உயிர்களும் அவனை வரவேற்
ம் துணைவனை முகமலர்ந்து வரவேற்
ர்களும் மொட்டவிழ்ந்து விரிகின்றன.

ில் இயற்கை காட்டும் இன்பக் காட்சி
.....................................................
லா, எதிர்காலத்திலா, நிகழ்காலத்திலா
.....................................................
தாகக் கூறப்படுகிறது? ......................
**களின் ஒருமைச் சொற்களை எழுதுக.**
....... 5. விரிகின்றன -.........................
**ள எழுதுக.**
...... 7. தாமரை - ...............................
**ள எழுதுக.**
..... 9. கிழக்கு - ...............................
யில் அடுக்கு மொழி சொல்லை எழு
.....................................................
யில் மேற்கோள் குறிக்குள் தரப்பட்ட
.....................................................
யர்ச் சொற்களின் கீழ்க் கீறிடுக.
தாமரை, விடுகிறான்
.....................................................
.....................................................
**க.**
....... 16. வானம் - ..........................
....... 18. தாமரை - ..........................
**க்து பற்றிய விவரம் தரப்பட்டுள்ளது.**
**வரையிலான வினாக்களுக்கு விடை**

டுவில் தெற்கு, சாவகச்சேரியை
ணசிங்கம் செல்வராணி தம்பதிகளின்
தனது பத்தாவது பிறந்தினத்தை
கிழமை அன்று தற்போதைய வசிப்பிட
இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடு

கின்றார். இவரை அம்மா, அப்பா, அக்கா தயாழினி, தங்கை கிருசாந்தினி ஆகியோரும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

19. பிறந்த நாளைக் கொண்டாடுபவரின் முழுப் பெயரை எழுதுக.
20. வினோதனின் பெண் சகோதரர்களின் பெயரை எழுதுக.
21. வினோதனின் பிறந்த மாதம் எது?
22. அவர் 4ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பார்? ..........................................
23. இந்த ஆண்டு (2001) பெப்ரவரி மாதத்தில் எத்தனை நாள்கள்?
24. மேலுள்ள விவரத்தின்படி 25.02.2001 அன்று என்ன கிழமை ஆகும்? ..........................................

**★ ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைப் பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.**

25. Mother ................ 26. Birthday ................
27. Friends ................ 28. Tenth ................

**★ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

29. நரம்புக் கருவி எது?
1. வயலின் 2. நாதசுரம் 3. மிருதங்கம் 4. புல்லாங்குழல்
30. ஒருவரிடமிருந்து ஒருவருக்குத் தொற்றாத நோய் எது?
1. தடிமன் 2. பல்வலி 3. கொப்பளிப்பான் 4. கண்நோய்
31. குட்டியை வயிற்றுப்பையில் வைத்துச் செல்லும் மிருகம் எது?
1. வௌவால் 2. குரங்கு 3. கங்காரு 4. நாய்
32. நீரில் மிதக்கக் கூடிய பொருள் எது?
1. கல் 2. ஆணி 3. காற்றடித்தபந்து 4. குண்டூசி
33. பொருள்கள் ஒன்றுடன் ஒன்று உரோஞ்சுவதால் வெளிவரும் சக்தி எது?
1. ஒளிசக்தி 2. வெப்பசக்தி 3. மின்சக்தி 4. இயக்கசக்தி

**★ பின்வரும் பிரசினங்களை வாசித்து வினாக்களுக்குரிய விடையை எழுதுக.**

34. ஒரு பஸ்வண்டியில் 50 பிரயாணிகளுக்கு ஆசனங்கள் உண்டு. ஒவ்வொரு வலைப்பந்தாட்டக் குழுவிலும் ஏழு விளையாட்டு வீராங்கனைகளும், ஒரு மேலதிக வீராங்கனையும் உள்ளனர். நான்கு வலைப்பந்தாட்டக் குழுக்களும், இரண்டு ஆசிரியைகளும் அந்த பஸ் வண்டியில் சென்றனர். பஸ் வண்டியில் எத்தனை ஆசனங்கள் மீதியாக உள்ளன? ..........................
35. ஒரு கல்லூரியைச் சேர்ந்த 346 மாணவர்கள் பஸ் வண்டி மூலம் நீச்சல் தடாகத்துக்குச் சென்றனர். ஒரு பஸ் வண்டியில் 50 மாணவர்கள் பயணம் செல்லலாம் எனின் ஆகக் குறைந்தது எத்தனை பஸ் வண்டிகள் தேவையாக இருந்திருக்கும்?
36. பாத்திமா ஓர் எண்ணை நினைத்தாள். அதனை 3ஆல் பெருக்கி அதனுடன் 6ஐக் கூட்டினாள். கிடைத்த விடை 30 ஆகும். அவள் நினைத்த எண் யாது? ..........................
37. செந்தாளனிடம் 5 2 9 என எண்கள் எழுதப்பட்ட மூன்று அட்டைகள் இருந்தன. இவ்வட்டைகளைப் பயன்படுத்தி அவன் உருவாக்கக் கூடிய அதி பெரிய ஒற்றை எண் யாது?
38. ரெனிஸ் இறுதியாட்டம் மு.ப.8.30 மணிக்கு ஆரம்பமாகி 45 நிமிடங்களுக்கு நீடித்தது. அந்த ஆட்டம் எத்தனை மணிக்கு முடிவுற்றது? ..........................


**★ கீழ்வரும் தாவரங்களைப் பொருத்தமான வகைகளுக்குள் எழுதுக.**
தேயிலை, கோவா, திராட்சை, இறப்பர், கராம்பு, சவுக்கு, குரோட்டன், சாதிக்காய், கொடித்தோடை, கரட், அந்தூரியம், நிழல் வாகை.

39. உணவுப் பயிர்கள் - ..........................
40. பணப் பயிர்கள் - ..........................
41. பழத்தாவரங்கள் - ..........................
42. சிறுபயிர்கள் - ..........................
43. நிழல் தரு மரங்கள் - ..........................
44. அலங்காரத் தாவரங்கள் - ..........................

**'அ' பகுதிக்குப் பொருத்தமானவற்றை 'ஆ' பகுதியில் இருந்து தெரிந்து அடைப்புக்குள் அதன் இலக்கத்தை எழுதுக.**

| அ | | ஆ |
|---|---|---|
| 45. பதப்படுத்திய களிமண்ணால் | (.......) | 1. நடமாடும் ஆமை |
| 46. கடதாசியை மடித்து, வெட்டி | (.......) | 2. பாய் உருவாக்குதல் |
| 47. இயங்கும் விளையாட்டுப் பொருட்கள் | (.......) | 3. சுவரொட்டி ஆக்கம் |
| 48. விளம்பரத்திற்குப் பொருத்தமானது | (.......) | 4. செதுக்குதல் மூலம் ஆக்கம் |
| 49. பின்னல் இழைத்தல் | (.......) | 5. பூ ஆக்கம் |

**★ கீழே ஒரு பூவின் பகுதிகள் தெரியக்கூடியவாறு பட அமைப்பு தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**
**பூவின் பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய இலக்கத்தை கூட்டுக்குள் எழுதுக.**




50. அல்லி (.......) 51. புல்லி (.......)
52. குறி (.......) 53. சூலகம் (.......)
54. கேசரங்கள் (.......)
55. பூவிலே பூச்சிகளைக் கவரும் பகுதியின் பெயரை எழுதுக. ..........................
56. பூச்சிகள் பூவில் எதனைப் பெறுகின்றன? ..........................


57. இரவில் மலரும் பூ ஒன்றின் பெயரை எழுதுக? ..........................

**★ கீழே கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

58. இலங்கையின் தேசிய மரம் எது?..........................
59. கிரிக்கெட் ஆட்டத்தில் ஒரு குழுவில் எத்தனை பேர் விளையாடுவர்?..........................
60. முண்டத்தை நிமிர்த்தி வைத்து கைவிரல்களை மடித்து தொடைகளில் தொடுமாறு வைத்து கால்களை அருகருகே வைத்துச் சமநிலையாக நிற்கும் நிலை கீழ் உள்ளவற்றில் எவ்வகை நிற்றல் ஆகும்?
இலகுவாய் நிற்றல்/கவனமாய் நிற்றல்/சுயாதீன நிற்றல்
..........................
61. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, தொலைபேசி இவற்றை ஒருமித்து எவ்வாறு அழைக்கலாம்? ..........................
62. இ.ஒ.கூ. எனும் குறுகிய பதம் குறிக்கும் முழுப் பெயரையும் எழுதுக?..........................

**★ ஆரம்ப பாடசாலை ஒன்றில் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் தொகையை இவ்வட்டவணை காட்டுகிறது.**

| வகுப்பு | மாணவர் தொகை |
|---|---|
| தரம் 1 | 105 |
| தரம் 2 | 120 |
| தரம் 3 | 115 |
| தரம் 4 | 95 |
| தரம் 5 | 105 |




63. அருகே உள்ள நிரல் வரைபில் தரம் 1ஐ நிழற்றியது போல் ஏனைய வகுப்புக்களையும் நிழற்றிக் குறித்துக் காட்டுக.
64. எவ்வகுப்புக்களில் மாணவர்கள் சம எண்ணிக்கையில் உள்ளனர்? ..........................
65. ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை உள்ள வகுப்பைவிட ஆகக் கூடிய மாணவர்கள் எண்ணிக்கை உள்ள வகுப்பில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக உள்ளனர்?..........................
66. நாடகக் காட்சி ஒன்றுக்காக தரம் 3 மாணவர்களிடமிருந்து ஒருவரிடம் 3 ரூபா அறவிடப்பட்டால் அவ்வகுப்பிலிருந்து கிடைக்கும் பணம் எவ்வளவு?..........................
67. ஆசிரியர் தின விழாவின் போது மாணவர்களுக்கு பிஸ்கட் பரிமாறப்பட்டது. ஒரு மாணவருக்கு இரண்டு பிஸ்கட்டுக்கள் வீதம் கொடுத்தால் அப்பாடசாலை மாணவருக்குக் கொடுக்கத் தேவையான பிஸ்கட்டுக்களின் எண்ணிக்கை யாது? ..........................
68. தரம் 2 மாணவர்களை விளையாட்டு ஒன்றிற்காக 5 குழுக்களாகப் பிரித்தால் ஒரு குழுவில் எத்தனை மாணவர்கள் இருப்பார்கள்? ..........................
69. தரம் 5 இல் படிப்பவர்களின் 58 பேர் ஆண்பிள்ளைகள் எனின் பெண்பிள்ளைகள் எத்தனை பேர்?..........................

**★ பின்வரும் நியம அலகுகளின் குறியீட்டை ஆங்கிலத்தில் எழுதுக.**

70. கிலோக்கிராம் .................... 71. கிராம் ....................
72. மில்லிலீற்றர் .................... 73. சென்ரிமீற்றர் ....................
74. கிலோமீற்றர் ....................

**★ 'நான் ஒரு வள்ளலானால்....' என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் அமைதல் வேண்டும்.**

75. ..........................
76. ..........................
77. ..........................
78. ..........................
79. ..........................
80. ..........................

**தயாரிப்பு:**
**திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)**
**(யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.)**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

30 நாள் நிரம்பிய கறுப்பு இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மார்க்கண்டு M.S.லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (89233)

ஆறு மாதங்கள் நிரம்பிய சணல் ஆட்டுக்கடாக் குட்டியோடு தாய் ஆடும் (பால் தரும் நிலையில்),45 நாள்கள் நிரம்பிய (ஆண், பெண்) நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செல்வம், இல. 107,டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (89467)

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் **MD90** மொடல் 21, சிறுவர்களுக்கான கீரோ துவிச்சக் கரவண்டி, இரண்டு மிருதங்கம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- சுவாணி கிறிஸ்ரி, இல. **27/13**, புங்கன்குளம் வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (89468)

100 இரும்புக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.தேவராசா (பந்தல் சேவை) இல.91, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (89474)

## மணப் பெண்கள் தேவை

1949, 51, 53, 55, 56, 59, 60 ஆண்டுகளில் பிறந்தவர்கள், சவூதி சென்றோர், சுயதொழில் கொண்ட பொறுபபுகள் இல்லாத, நற்குணம் கொண்ட இந்துசமய ஆண்களுக்கு தொழில் உள்ள (ஆசிரியர்கள்) இல்லாத, செவ்வாய் தோஷம் உள்ள, இல்லாத, நற்குணம் கொண்ட மணப் பெண்கள் தேவை. சுயவிலாசம், முழு விவரம் இணைத்து தொடர்புகளுக்கு: விள.இல.1312, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89501)

## தவறிவிட்டது

24-06-2001 ஞாயிறு மாலை யாழ்ப்பாணத்திலிருந்து இராச வீதியூடாக சந்நிதிக்குச் செல்லும் வழியில் எனது காரின் வீல் கப்பும் அதன் தகடும் விழுந்து விட்டன. கண்டு எடுத்தவர்கள் பிரதம பொறியியலாளர், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி இல.2632, 2872. (89486)

ஆனைக்கோட்டை, சாவற்கட்டு என்ற முகவரியைச் சேர்ந்த கனகேந்திரம் புவனேஸ்வரியின் தேசிய அ. அட்டை, விஷேட அடையாள அட்டை என்பனவும், க.உஷாநந்தினி, க.கவிதன் எனபவர்களின் விஷேட அ.அட்டைகளும் தாவடிச் சந்திக்கும் - அண்ணாமலை வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (89484)

## இலக்கியக் கட்டுரைகள்

24.06.2001 உதயனில் பிரசுரிக்கப்பட்ட நவீன இலக்கியங்கள் பற்றிய கட்டுரையை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கியக் கட்டுரைகள் நூலில எல்லா வகை நவீன இலக்கியங்களுக்கும் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. (89413)

## மணமகன் தேவை

34 வயது, அனுஷம், செவ்வாய்க் குற்றம் உள்ள அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு ஏற்ற மணமகன் தேவை. தொடர்பு:-திரு.பாலச்சந்திரன், 51,சங்கிலியன் வீதி, நல்லூர். (89491)

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*இலங்கை*

## பழைய மாணவர் தொடர்பகம்
## University of Jaffna, Sri Lanka.
## Alumni Office

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பழைய மாணவர் தொடர்பகம் செயற்படுவது யாவரும் அறிந்ததே. பழைய மாணவர்களினதும், பட்டதாரிகளினதும் (முதற்பட்டங்கள்: M.B.B.S., B.Sc., B.Ad., B.Com, B.A., RAFA. Diploma or Degree, உயர் பட்டங்கள் M.A., M.Sc., M.Phil, Ph.D)நலன்களை மேம்படுத்தவும், பல்கலைக்கழக வளர்ச்சியில் அவர்கள் பங்குகொள்ளவும் இத்தொடர்பகம் உதவும்.

கடந்த 25 வருடங்களாக இப்பல்கலைக்கழகத்தில் பட்டங்களைப் பெற்றவர்களில் இதுவரை பழைய மாணவர் தரவுப் படிவத்தினைப் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து நமக்களிக்காதவர்கள், தயவுசெய்து இப்படிவத்தினைப் பெற்று, நமக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள நமது பழைய மாணவருடனான தொடர்பு, கருத்துப் பரிமாறலுக்கும் அதன் மூலம் இருபகுதியினரதும் மேம்பாட்டுக்கும் வழிவகுக்குமாதலால் இவர்களுடன் தொடர்புள்ளவர், தயவு செய்து இவர்கள் பற்றிய தகவல்களை நமக்கு அளித்தால் நாம் அவர்களுடன் தொடர்பு கொள்ள வசதியாக இருக்கும். இத்தகவல்கள் தங்களின் நலன்களை மேம்படுத்தவும் பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் தங்களின் பங்களிப்பினை முன்னெடுக்கவும் பேருதவியாக அமையும். இதனால் இப்பல்கலைக்கழக வளர்ச்சியில் தாங்கள் பங்கு கொண்டு மகிழவும் சந்தர்ப்பம் வழங்குவதாக இது அமையுமென நம்புகின்றோம்.

தபால் மூலம் இப்படிவத்தினைப் பெறவிரும்புவோர் கீழ்க் காணும் முகவரிக்கு அவர்களது முகவரியை (வதிவிட முகவரி/ அலுவலக முகவரி) அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்பு முகவரி:*

*பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்*
*பழைய மாணவர் தொடர்பக இயக்குநர்,*
*பழைய மாணவர் தொடர்பகம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
*த. பெ. இல. –57,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

தொலைபேசி: 0094-21-2006
தொலைநகல்: 0094-21-2006
மின்னஞ்சல்: **botany @ panlanka.net** (C/17243)

## ஆலய புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

கொழும்புத்துறை ஆனந்தன் வடலிப் பகுதியில் அமைந்துள்ள புனித செபமாலை அன்னை ஆலய புனரமைப்புப் பணிகளுக்கென ஒருலட்சம் ரூபா நிதியை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளதாக ஆலய பங்குமக்கள் தெரிவித்தனர்.

இந்த ஆலயம் கடந்த கால போர் அனர்த்தங்களால் சேதமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.(க-17)

## கொழும்புத்துறையில் சிவில் நிர்வாக அலுவலகம

அரியாலை, ஜூன்28

கொழும்புத்துறை மேற்கில் இடம்பெயர்ந்த மக்களின் வசதி கருதி அப்பகுதியில் சிவில் நிர்வாக அலுவலகம் ஒன்றை இராணுவத்தினர் திறந்துள்ளனர்.

இந்த சிவில்நிர்வாக அலுவலகம் கொழும்புத்துறை மேற்கு கணக்கர் சந்திப் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கத் தொடங்கியுள்ளது. (க-17)

## ஆசிரிய டிப்ளோமா கற்கை நெறிக்கு 150 பேர் தெரிவு

வலி.தென்மேற்கு,ஜூன்28

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர பட்டதாரி ஆசிரியர் தெரிவுப் பரீட்சையில் இவ்வருடம் 150 பேர் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

மேற்படி பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 300 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததாக உயர்பட்ட பீடாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

மேற்படி பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு இவ்வருடம் யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படாததே, யாழ்.பல்கலைக்கழகத்தில் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமைக்குக் காரணமாகும். (க-185)

## வாழ்வகம் பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன்28

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி நடைபெறவிருந்த மானிப்பாய் வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தின் பொதுச்சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டம் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மஹோற்சவம் இம்முறை இல்லை

யாழ்ப்பாணம், ஜூன்28

சுன்னாகம்-மயிலணி கந்தசுவாமி ஆலயம பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளதால் இவ்வருடம் வருடாந்த மஹோற்சவம் நடைபெறவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆலயத்தில் கந்தபுராணம் படிக்கப்பட்டு முற்றோதல் முடிவடைந்துள்ளது. தற்போது பெரிய புராணப் படிப்பு நடைபெறுகின்றது. பன்னிருதிருமுறைகள் படிக்கப்பட்டு முற்றோதல் நடைபெறும். (க-152)

**இன்று**
**கருத்தரங்கு**
**"வணிகக்கல்வி"**

இடம்:- **நிரு**
**கோண்டாவில்**
நேரம்: 3.00 p.m.
**மாணவர்கள் பயன்பெற வருக!**
(89513) **V.முரளி**

# SLAS

போட்டிப் பரீட்சைக்கு, பூபால சிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகிறது!

**பொது அறிவு**

ஆசிரியர்:
**V.A.சிவராசா**
(கலை, தத்துவ டிப்ளோமா)
(89512)

# A/L 2003 புதிய பிரிவு

(சில கால இடைவெளிக்குப் பின் எமது அனுபவம் மிக்க ஆசிரியர்கள்)

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | நாதன் |
| தமிழ் | - | குழந்தை |
| இந்துநாகரிகம் | - | அருள்நங்கை/சிறிஸ் |
| நாடகம் | - | குழந்தை சண்முகலிங்கம் |
| அளவையியல் | - | R.P.சர்மா |
| புவியியல் | - | கந்தசாமி |
| அரசியல் | - | கியூபேட் |
| வரலாறு | - | சின்னராசா |

(89437)

ஆரம்பம்: 30.06.2001 (காலை 8 மணி)
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 - 03 - 1925



விண்ணில் 01 - 07 - 1998

உரும்பிராய் மேற்கு
**திருமதி புனிதவதி நல்லதம்பி அம்மையார்**

திதி: ஆனி பூர்வபக்க அட்டமி (28-06-2001)

**இறைவனடி சேர்ந்தனளே!**

"நல்லதம்பி திருமனையாள்
நாடறிந்த பிள்ளைகளைச்
செல்வமெனப் பெற்றெடுத்த
திருவாட்டி புனிதவதி,
நல்லவராம் மருமக்கள்
நலங்கனிந்த பேரர்கள்
எல்லவரும் ஏங்கிநிற்ப
இறைவனடி சேர்ந்தனளே"

**அன்புள்ள அம்மா!**

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் மூன்றுதான்! எத்தனை, ஆண்டுகள்தான் ஓடிமறைந்தாலும் எங்கள் எல்லோரது உள்ளங்களிலும் தெய்வமாகவே இருப்பீர்கள்!

**- கணவர், மக்கள், மருமக்கள், பேரர்கள்.**

*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.* (89508)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு செல்லத்துரை

வைத்திலிங்கம் வித்தியாசாலை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த முருகேசு செல்லத்துரை நேற்று (27.06.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், தவராசா (கொழும்பு), நாகராசா (மரக்காலை உரிமையாளர்), கமலநாதன் (பேபி, இத்தாலி), நிர்மலா (கனடா), ஜெயநாதன் (கனடா), யுவதாசன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி, இராசாத்தி, நிலா, தவராசா, விஜயகுமாரி, ஜாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுனன், ரஞ்சித், றஜிதா, ரஜிகுமார், ஜனோஜா, ஜென்சன், சாளி, தனுசி, நிசாகன், சயெத்தன், ஜெனித்தா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற காந்தி மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவீத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*வைத்திலிங்க வித்தியாசாலை வீதி,*
*வண்.வடமேற்கு,*
*ஆனைக்கோட்டை.*
(89515)

தகவல்:
செ.நாகராசா
*(மரக்காலை உரிமையாளர்)*
மகன்.

## சுப்பர் வயித்திலிங்கம்

(புகையிரத நிலைய ஓய்வூதியர்)

வெளிப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பர் வயித்திலிங்கம் நேற்று (27.062001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி (இலங்கை), நாகலஷ்மி(பாங்கொங்), இராசலிங்கம்(நோர்வே), இரஜனி(பாங்கொக்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் இராஜசிங்கம்(பாங்கொக்), பத்மினி ஆகியோரின் மாமனாரும், பிரதீபன் (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்), பகீரதன் (லண்டன்), நிறூஞ்சினி (லண்டன்), சுகாசினி(லண்டன்), சிவானி (இலங்கை), தர்சினி (பாங்கொக்), தாரணி (பாங்கொக்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2001) வியாழக்கிழமை மு.ப. 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல், தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*வெளிப்புலம்,*
*சுன்னாகம்.* (89516)

தகவல்:
இராசலிங்கம்
(மகன்)

# வெல்ல முடியாப் போதைப் பிரபுக்களும்

இந்தியத் திரைப்படங்களில் வரும் பண்ணையாரின் அட்டகாசங்கள் இறுதியில் ஒரு நோஞ்சான் ஹீரோவினால் அடக்கப்பட்டுவிடும்.



புகைத்தலுடன் இழுக்கும் போதைப் பவுடர்

படம் தொடங்கும்போதே முடிவும் இதுவாகத்தான் இருக்கும் என்பதும் தெளிவு. அங்கே அட்டகாசங்கள் தொடருவதாக திரைப்பட வரலாற்றில் முடிவு கிடையாது. ஆனால் நிஜவாழ்க்கையில் தாராளமாகப் பண்ணையாளர்களைச் சந்திக்கலாம். ஹீரோக்களைச் சந்திப்பது மிகமிக அருமை.

பிரபுக்கள் (Lord) என்று மேற்குலக நாகரீகத்திலும், அரசர்கள் (King/Czar) என்றெல்லாம் உலகளாவிய ரீதியிலும் பேசப்படும் வரலாறுகள் இன்று நிஜவடிவில் பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். சில நாடுகளில் முடியாட்சி பற்றிப் பேசப்பட்டாலும் அதன் வீரியம் குறைவாகவே காணப்படுகின்றது.

எனினும் உலக வல்லரசான அமெரிக்காவில் அரசுகளையே ஆட்டிப்படைக்கவல்ல தனிக்காட்டு ராஜாக்கள், பிரபுக்கள், பண்ணையாளர்கள் அல்லது வீரப்பன்கள் என்ற ரகத்தினர் இன்றும் வலிமையுடன் திகழ்கின்றார்கள். பணபலமும், ஆயுதபலமும், ஆள்பலமும் அவர்களிடம் குவிந்து கிடக்கின்றன.

கொலம்பியாவில் வடகிழக்குப் பிரதேசத்தில் பனிப்படலங்கள் கவிந்திருக்கும் மலைகளின் அடிவாரத்தில் போதைப்பொருள்களான கொக்கெயின் உற்பத்திக்குரிய கொக்காச் செடிகள் பெருந்தோட்டப் பயிர்கள் போன்று பரவிக் கிடக்கின்றன. அப்பிரதேசத்தில் தலைவர் என்றோ பிரபு என்றோ சக்கரவர்த்தி என்றோ கருதப்படுபவன்தான் ஹேனன் கிரல்டோ (Hernan Giraldo). அவனது பெயரைப் பலமாக உச்சரிப்பவர்கள் இல்லை. காதோடுகாது வைத்துத்தான் கிராமவாசிகள் அவன் பெயரைச் சொல்லுவது வழக்கம்.

அவனது தனிப்பட்ட படையணி 400 இற்கும் அதிகமான சிப்பாய்களைக் கொண்டுள்ளது. எவரும் அவனை நெருங்க இயலுவதில்லை. போதைப்பொருள் வியாபாரத்தில் அவனது ஆண்டு வருமானம் 1200 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டுகிறது. வியத்தகு வருமானத்தில் ஒரு சல்லிக்காசுகூட வரி செலுத்தாமல் வாழும் அவனது வாழ்க்கையை வெறுமனே கைகட்டி நின்று அரசு பார்த்துக்கொண்டிருக்க முடிகிறதே தவிர வேறு வழி கிட்டவிலலை.

திரைப்படக் ஹீரோக்களை அனுப்பியாதல் இத்தகைய போதை ராஜாகளை (Drug Czar) மடக்கிவிட ஏனோ அமெரிக்க அரசுகள் நினைக்கவில்லை. ஏன் அமெரிக்க நாவல்களிலும் திரைபடங்களிலும் கூட அவர்கள் (ஹீரோக்கள்) தோற்கடிக்கப்படுகிறார்கள்.

போதிய வருமானத்தில் அரச அதிகாரிகளுக்கும் படையினருக்கும் தாராளமாகக் கப்பம் கொடுத்தோ, தப்பினால் மிரட்டியோ கப்பல் கப்பலாகக் கொக்கெயின் கொலம்பியாவிலிருந்து உலகெங்கும் போய்ச் சேர்ந்து விடுகின்றது. அருகில் இருக்கும் வடஅமெரிக்க நாடுகளின் நிலைமையோ மிகப் பரிதாபம்தான். உலக



கொக்கேயின் செடிப் பெருந்தோட்டம்

வல்லரசனாலும் இதில் எதையும் செய்வதற்கு இல்லை.

கிரல்டோ நடமாடும் பிரதேசங்களில் படை நடவடிக்கை எதையும் மேற்கொண்டாலும் அவனைக் கைது செய்ய இயலுவதில்லை. அப்படியான சந்தர்ப்பங்களில் அவன் மலைக்காட்டுப் பிரதேசங்களுக்குள் ஆழமாகப் புகுந்துவிடுவான். தகவல்களை அவனுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப் போதிய மதிநுட்பம் வாய்ந்த புலனாய்வுப் பிரிவுகள் அவனிடமே இருக்கின்றன.

Santa Marta வட்டாரத்தில் பல பங்களாக்களும் பண்ணைகளும் வியாபார வாய்ப்புக்கள் வசதிகளும் அவனது கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. மீன்பிடி ஏற்றுமதி வர்த்தகத்திலும் அவனது சாதுரியம் வெளிப்பட்டே நிற்கின்றது. இத்தகைய பல தரப்பு வியாபாரங்களினூடே நடைபெறும் கொக்கெயின் வியாபாரத்தை கண்டுபிடித்திடல் அவ்வளவு சுலபமானதல்ல.

பாதுகாப்புத் தரப்பினர் அங்கே கண்டுபிடித்தோம், இங்கே கொளுத்தினோம் என்று அடிக்கடி தகவல்களையும், படங்களையும் வெளியிட்டு வந்தாலும் எல்லாம் புலிபிடிக்கப்போன கதையாகத்தான் முடிந்துவிடுவதுண்டு. திட்டமிடலில் ஈடுபட்டிருந்த கொலம்பிய இராணுவ மேயர் ஒருவரை 1999 இல் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்படும் கொக்கெயினை களஞ்சியப்படுத்தவென களஞ்சிய கட்டட அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த 4 கட்டட வேலையாள்கள் மின் அரிவு இயந்திரத்தில் தசைத் துண்டங்களாக வெட்டப்பட்டிருக்கிறார்கள். கொக்கெயின் கடத்தலுக்கு துணைபோக இலஞ்சம் கேட்டவர்கள்கூட அதே இயந்திரங்களுக்குத் தீனியாகி இருக்கிறார்கள்.

மனம் வைத்துக் கொடுத்தாலன்றி எவருக்கும் லஞ்சத்தைக் கேட்டுப் பெறும் உரிமைகூட அங்கே மறுக்கபடுகின்றது என்பதுதான் உண்மை. அமெரிக்க மற்றும் கொலம்பிய அரசுகள் பல ஆயிரம் மில்லியன் டொலர் செலவில் பெரும் திட்டங்களைத் தீட்டி போதைக்கு எதிரான போரை நிகழ்த்தி வருகின்றன. இப்போரில்தான் அண்மையில் ஒரு குடும்பம் பயணம் செய்த செஸ்னா தனியார் இலகுரக விமானமொன்று பாதுகாப்புத் தரப்பினரால் சந்தேகத்தின் பேரில் பரிதாபமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தது. இலக்குகள் தவறிவிடுகின்றனவே தவிர சிவர எட்டப்படுதல் இல்லைப் போலும். கிரல்டோவின் புகைப்படம் ஒன்று கையில் கிடைத்துவிட்டதே பெரிய சாதனை என்று பாதுகாப்பு வட்டாரங்களில் பேச்சடிபடுவதாகத் தகவல்.

"தன்வினை தன்னைச் சுடும்" என்கின்ற பழமொழி பிரேசிலிலும் பொருந்தி வருகின்றது. முன்பெல்லாம் போதைப்பொருள் பரிமாற்றத்தில் பெருமளவு உழைத்துக் குவித்த அந்தத் தென்னமெரிக்க நாட்டில் பொருள்களை பெற்றுக்கொள்ள வேண்டி பொருள் ஈட்ட எந்த வழியையும் அவர்கள் நாடி நிற்கிறார்கள். கொலையோ, கொள்ளையோ ஆண், பெண் இரு பாலாருக்கும் சர்வசாதாரண விடயமாகத் தெரிகின்றது. சாதாரண குடி மக்கள்பாடு திண்டாட்டம் தான்.

கும்பல்களின் அட்டகாசத்தைப் பார்த்தால் குலைநடுக்கம் எடுக்கிறது. தடுத்திடும் சக்தி எவரிடத்திலும் இல்லை என்கின்ற நிலைமை. நன்மை தீமைகளை விளங்கிக் கொண்டு சரிவர நடக்கும் தன்மை போதைக் கும்பல்களிடம் கிடையாது. அவர்களின் உலகமே தனிதான்.

கஞ்சா போலன்றி கொக்கெயின்



அருமையாகக் கிடைத்த கிரல்டோவின் படம்

அளவில் சிறியதாய் போதைத் தரத்தில் உயர்ந்ததாய் இருப்பது கடத்தல் பேர்வழிகளுக்கு வாய்ப்பாகி விடுகிறது. கப்பல்களில் தொன் கணக்கில் ஏற்றப்படும் சரக்குகளின் இடையே ஒரு சிறுபெட்டியில் அடைபட்டுக் கிடக்கும் கொக்கெயினைக் கண்டுபிடிப்பது சிரமமே.

அமேசன் நதிக்கரையோரம் கிலோ ஐயாயிரம் டொலருக்கு கிடைக்கும் கொக்கெயினின் அமெரிக்க சந்தை விலை பதினையாயிரம் டொலர்களைத் தாண்டுகின்றது என்றால் ஐரோப்பாவில் அதன் விலை என்னவாகும்?

போதைப்பொருள் வர்த்தகத்தினால் பிரேசில், கொலம்பியா போனற நாடுகளில் குவியும் செல்வத்துக்கோ குறைச்சல் இல்லை. மளமளவென வானளாவ உயரும் கட்டடங்களும் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளும் நாட்டினூடே கடத்தப்படும் போதைப்பொருள் பார்சல்களில் இருந்து சிந்திய செல்வங்களே என்றால் மிகையாகா.

அவ்வாறு வருவாய் அதிகரிக்கும்போது அதன் கறை இளைஞர் மனங்களில் படியத் தவறுதல் இல்லை என்பதும் விதியாகின்றது. நவீன கலாசாரம் அவர்கள போதை மற்றும் வன்முறை உச்சத்தில் மிதக்க வைக்காதவிடத்து எவ்வாறு நாடு முன்னேறியதாக கருத இடமுண்டு? கையில் ஒரு சிகரெட் இல்லாதவிடத்து பையனின் அந்தஸ்து குறைவு என்றுதான் பெண்களே எண்ணிவிடுகின்ற காலம் இது அல்லவோ.

ஹெரோயின் (Heroine) என்றாலே கதாநாயகி என்றுதான் அர்த்தம். போதைக்கு பெண்ணின் பெயர் வந்ததற்கு ஒரு காரணமும் உண்டு. பெண்கள் வேதனைகளை கிளறுகிறார்களா அல்லது தணிக்கிறார்களா என்கின்ற வாதங்கள் வேறு விடயம். முதலாம் உலகப் போரில் காயமடைந்த பெருமளவு இராணுவ வீரர்களின் வேதனையை ஆற்றுவிக்க இந்த ஹெரோயின் என்ற வீராங்கனை பெருமளவில் அறிமுகமாகி இருந்தாள். அவளைத் தழுவி தமது வேதனைகளை அவர்கள் மறக்கலானார்கள்.

உடல் வலியை மறக்க பயன்பட்டு வந்த ஹெரோயின் மனவலிக்கு மருந்தாகப் பயன்படத் தொடங்கியது தான் சிக்கலின் ஆரம்பமாகின்றது. இழுத்தவுடன் ஓர் உச்சசுகம் காட்டும் அந்த அனுபவம் ஆயுசுக்கும் மறக்காது. அதேபோல மீண்டும் மீண்டும் இழுத்துப் பார்த்தாலும் அந்த முதல்சுகம் கிடைக்காது.

முதல் சுகத்தை நினைத்து - அதை மீண்டும் எட்ட நினைத்து - பாவிக்கும் அளவை கூட்டிக்கொண்டே போனாலும் திருப்தி கிட்டாது. மாறாக உடல் இயக்கங்களை அது பலவகைகளிலும் பாதித்துவிடும். மனச் சமநிலையையும் குலைத்துவிடும்.

இலங்கையை ஹெரோயின் 1983ல் தான் முதன்முதலில் தாராளமாக எட்டிப்பார்த்ததாக கருதப்படுகின்றது. தற்போது அதன் பாவனையோ தாராளம்; ஏராளம். சிறிய அளவுகளில் விமான நிலையங்களின் ஊடாகவும் பெருமளவில் கப்பல்களில் இருந்து வள்ளங்களின் மூலமாக நீர்கொழும்புக் கடற்கரையோரமாகவும் வந்திறங்கி இவை நாட்டினுள் புகுந்து விடுகின்றன.

உள்ளே விநியோகஸ்தர்கள், சிறு வியாபாரிகள், பாவனையாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் தயாராக இருக்கிறார்கள். உள்ளூர் மருத்துவத்தில் பயன்பட்டு வந்த கஞ்சா ஒரு போதைப்பொருளாகவும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டாலும் ஹெரோயின் கொக்கெயினோடு ஒப்பிடுகையில் அதன் தாக்கம் மிக மிகக் குறைவு என்றே கருத இடமுண்டு. அது தரும் போதையும் சற்று மந்தமானதுதான். எனவே பின்விளைவுகளும் குறைவுதான்.

எமக்கு மிக அருகில் நெருங்கி நிற்கும் இந்த ஆபத்தை பகிடிக்கேனும் அணைக்காமல் இருப்பதே உசிதமானது. உடலில் பட்டுவிட்டால் தொட்டுவிடும் தீராத தலைவலிகள் ஏராளம். அவை பற்றி ஏற்கனவே பல கட்டுரைகளில் கண்டோம். போதை சுகம் கண்டவர்கள் அது கிடைக்காதபோது விரக்தியடைகிறார்கள். மிகஅண்மையில் கொழும்பு அருகே மூவர் ஹெரோயின் கிடைக்காத இத்தகைய விரக்தியினால் ரயிலின் முன்னே பாய்ந்து தற்கொலை செய்திருக்கிறார்கள். ☆

# சொல்லொணாத் துயரங்களும்.....



எரியும் போதைக் காடு

தற்போது பணப்புழக்கம் இளசுகளின் அபரிமித போதைப் பாவனைக்கு வழிகோலிநிற்கிறது.

கூட்டம் கூட்டமாக வீதிக்கு வரும் இளசுகளிடம் பணவசதி இருக்கிறதோ இல்லையோ வன்முறைக் கலாசாரம் நிரம்பி வழிகின்றது. எனவே போதைப்

**மு.சிவநேசன்**

---

# சமூக சேவைகள் அபிவிருத்தி அமைச்சின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில்

வலி.வடக்கு.ஜூன்28

சமூக சேவைகள், மீனவ சமூக வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நடமாடும் சேவை அடுத்த மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச்சேவையில் பொதுமக்களின் தேவைகள் பலவும் நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

✪ 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்குதல் -

✪ வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வயோதிபர்கள் உட்பட ஏனையோர்களுக்கும் மூக்குக்கண்ணாடிகள் வழங்குதல் -

✪ அங்கவீனர்களுக்கு முச்சக்கர வண்டிகள், சக்கரநாற்காலிகள், காது கேட்கும் இயந்திரம், ஊன்று தடிகள் வழங்குதல் -

✪ சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களை ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளுதல் -

✪ வறுமைக் கோட்டின் கீழ் வாழும குடும்பத் தலைவராக உள்ள பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்கு வேண்டிய தையல் இயந்திரங்கள், கால்நடை வளர்ப்பிற்கான உதவி, கோழி வளர்ப்பிற்கான உதவிகளை வழங்குதல் -

✪ வறிய மீனவக் குடும்பங்களுக்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் -

✪ அங்கவீனர்களுக்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்-

✪ விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக பொது விவசாயக் கிணறுகளைத் திருத்துதல், புதியவற்றை அமைத்தல் போன்றவற்றிற்கு உதவி செய்தல் -

✪ அரச சார்பற்ற நிறுவனங்களைப பதிவு செய்துகொள்ளுதல் -

✪ பெற்றோர்களை இழந்துள்ள பிள்ளைகளுக்கு வளர்ப்புப் பெற்றோர்களை ஏற்பாடு செய்து கொடுத்தல் -

✪ ஒரே தடவையில் மூன்று பிள்ளைகளுக்கு மேல் (2000ஆம் ஆண்டின் பின்னர்) பெற்றவர்களுக்கு பண உதவிகளை வழங்குதல் -

ஆகிய விடயங்களுக்கு இந்த நடமாடும் சேவையில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## வீட்டு நஷ்டஈடு கொடுப்பனவு வழங்கும் பணிகள் துரிதம்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 25 ஆயிரம் ரூபா வீட்டு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் பணிகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

கடந்த வாரம் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையில் இனம்காணப்பட்டவர்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடல் பணிப்பாளர் எம்.பாலசிங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

முறையாக வீட்டு உறுதி, பொலீஸ் அறிக்கை உள்ளவர்கள் வீடு சேதமடைந்திருந்தால் மேற்படி கொடுப்பனவுக்கு உரித்துடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-185)



இலங்கை வங்கியின் தலைமைப்பீடத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட "மகளிர் பொற்கணக்கு" அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் முதற்பரிசான மாருதிக் கார் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை வாடிக்கையாளரான மானிப்பாயைச் சேர்ந்த திருமதி கிருஷாம்பாள் கிருஷ்ணசாமி என்பவருக்குக் கிடைத்துள்ளது. இதற்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி யாழ்.பிரதேச முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் மாருதிக் காரின் பெறுமதிக்கான காசோலையை திருமதி கிருஷாம்பாள் கிருஷ்ணசாமியிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் சி.கிருஷ்ணானந்தன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)*

# நெஞ்சை விட்டகலா 31 ஆம் நாள்...

நான்முகன் படைப்பில்
11
-
09
-
1984



காலனவன் பறிப்பில்
29
-
05
-
2001

## செல்வி இலங்கநாயகம் துஷயந்தி (துர்க்கா)

(A/L 2003, உயிரியல் பிரிவு மாணவி -
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)

ஒளி திகழ் விளக்கே! ஒளி திகழ் விளக்கே!
நீ அணைந்தனையோ? நீ அணைந்தனையோ?
வாழப்பிறந்தாய் என்று நாம் மகிழ்ந்தோம்!
இடையிற் பிரிந்தாய்! எவ்விதம் பொறுப்போம்?
இளமையும் அழகும் துஷ்யந்தியென்னும்
பெயரினில் வந்து பிரிந்ததே! - நம்மை
ஆண்டுகள் பலவே சென்றிடினும் நின்னை
அவனியில் நாங்கள் மறத்தலும் உண்டோ?

இன்று (28-06-2001) வியாழக்கிழமை நிகழும் 31 ஆம் நாளில் எமது அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவினால் தவிக்கும்:
க.சிவபாலசுந்தரம் *(பேரன்)*,
சி.ஹரிகரன் *(மாமன்)*,
திருமதி ச.ஸ்கந்தகுமார் *(சிறியதாய்)*
(ஆசிரியை, யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி)

*லவ் லேன்,*
*உடுவில்.*
(89507)

# ஆசிரியர் தேவை

உயிரியல் பாடம் கற்பிப்பதற்குப் பொருத்தமான ஆசிரியர் தேவை. பல்கலைக்கழகத்தில் இறுதிப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் விரும்பத்தக்கது.

*தொடர்புகளுக்கு:-*
விளம்பர இல.1313, மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(89510)

# அறிவித்தல்

**யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்**
பதிவு இல. 6658
இல.30, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

**25-07-1999 தொடக்கம்**
**கீழ்க்காணும் கட்டண வீதம் அறவிடப்பட்டு வருகிறது என்பதை இத்தால் அறியத்தர விரும்புகின்றேன்**

| | | |
|---|---|---|
| முடியுடன் சேவ் | Hair Dressing & Shave | ரூ. 50.00 |
| முடி மட்டும் | Hair Dressing only | ரூ. 40.00 |
| சேவ் மட்டும் | Shaving only | ரூ. 20.00 |
| முடிவெட்டி தாடி ஒதுக்க | Hair Dressing & Shaping beard | ரூ. 60.00 |
| தாடி ஒதுக்க | Shaping beard | ரூ. 25.00 |
| குழந்தைகளுக்கு | Infants | ரூ. 25.00 |
| சிறுவர்களுக்கு | Children | ரூ. 30.00 |
| பெண்களுக்கு | Ladies Grown up | ரூ. 50.00 |
| மசாஜ் செய்ய | Macharging | ரூ. 20.00 |
| கீற்றர் பிடிக்க | Hair Drier | ரூ. 20.00 |

**விடுமுறை தினங்கள்**

தைப்பொங்கல் - தீபாவளி - நத்தார் ஆகிய விடுமுறை தினங்களுக்கு முன்னர் வரும் 6 நாள்களுக்குள் வரக்கூடிய புதன்கிழமைகளில் கடைகள் திறக்கப்படும்.

**விசேட விடுமுறை நாள்கள்**

பொதுக்கூட்டம் - விசேட பொதுக்கூட்டம் - தொழிலாளர் தினம் (மேதினம்)

**கிராமியத் தொழிலாளர்களுக்கும்**
**புதன்கிழமைகளில் விடுமுறையாகும்**

நிலைய உரிமையாளர்களும், அங்கத்தவர்களும் சங்க யாப்புவிதிகளுக்கு அமைய செயற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

(89505)
அ.அல்பேட்
செயலாளர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலைகளின் ஆசிரியையும் தற்போது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறுபவருமாகிய
**திருமதி வசந்தி தியாகலிங்கம்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கறுப்பையா சரஸ்வதி**
அவர்கள் காலமாகியதையிட்டு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை,
யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை.
(89509)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன்28

யாழ்.மாநகர சபையினால் நடத்தப்படும் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நல்லூர் இந்துபெண்கள் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை நிர்வாக உத்தியோகத்தர் இ.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேயர் என்ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி, யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம், 'யுனிசெவ்' நிறுவன களஉத்தியோகத்தர் அ.ஸ்ரீஸ்கந்தராசா, நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபர் திருமதி க.குணராஜா, செல்வி இ.தேவராணி, எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-5)

* * *

உடுவில் ஞானக்குழந்தைகள் இல்ல பாரதி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் பாடசாலை ஆசிரியை செல்வி கு. விஜயலதா தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரனும் சிறப்பு விருந்தினர்களாக க.அருந்தவராசா, ஐ.விஜயகாந்தன், சி.க.சிதம்பரநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக இ.தவகோபால், திருமதி தெ.இரத்தினகோபால், திருமதி எஸ். செல்வவிநாயகம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-5)

## கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன்28

வண்ணார்பண்ணை மேற்கு விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு அப்பகுதியிலுள்ள மாதர் முன்னேற்றச் சங்கங்கள் இணைந்து சைவசமயக் கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளன.

ஜே-97,98,99,100 ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த தரம் 3 தொடக்கம் தரம் 13 வரை கற்கும் மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்டுரைப்போட்டி அடுத்த மாதம் முதலாம் திகதி ஞாயிறறுக் கிழமை காலை 8.30மணி தொடக்கம் மாலை 3மணி வரை யாழ்ப்பாணம் இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-5)

## தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க கூட்டுறவு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்28

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் கூட்டுறவு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கூட்டுறவாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிவமகாராசாவின் சேவைநலன் பாராட்டு விழாவும் கூட்டுறவுத் தீபம் சிறப்பு மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது. (க-10)

உ
தேவி துணை

**தம்பசிட்டி பருத்தித்துறை**
**அருள்மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் தேவஸ்தானம்**
*(பண்டாரி அம்மன் கோயில்)*
*வருடாந்த மணவாளக்கோல திவ்வியப் பெருவிழா*
(1008 சங்காபிஷேகம்)

நிகழும் விஷு வருடம் ஆனித்திங்கள் 15ஆம் நாள் நாளை (29.06.2001) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேம் நடைபெறும்.

☆ காலை 9.00 மணிக்கு விஷேட பூசையும் நவசக்தி அர்ச்சனையும், அம்பாள் திருவூஞ்சலும், திருவீதி உலாவும் நடைபெறும்.

☆ நண்பகல் 12.00 மணிக்கு மாகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

சங்காபிஷேக பிரதமகுரு:
"சிவாகம வித்பத் ஜோதி" "புண்டிதர்"
**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள** புன்னாலைக்கட்டுவன்
(நல்லை ஆதீன சிவாச்சாரியார்)

*மங்கள வாத்தியம்:*
திரு. எல்.எஸ்.ஜெயநாதன் குழுவினர் (உடுப்பிட்டி)

*ஸ்ரீலஸ்ரீ சி.சபாரத்தினதேசிகர்*
*ஆலய பிரதமகுருவும், ஆதீனகர்த்தாவும்.*
(89383)

# 36ஆம் நாள்
# நினைவலைகளும் இதயப்பதிவுகளும்

அரும்பாக
1925
-
10
-
07



உதிர்வாக
2001
-
05
-
24

சமூகத்தின் மைந்தன்
**அமரர்**
## சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

செந்தாரகையின் தலைவனாகி
பாக்கியத்தின் துணைவனாகி
பிள்ளைகளுக்கோர் பிதாவாகி
மருமக்களுக்கோர் மாமனாகி
பேரருக்கோர் தாத்தாவாகி
சுற்றத்தார்க்கோர் வழிகாட்டியாகி
சமூகம் போற்றும் தலைவனாகி
ஓ ........
எம்மைவிட்டகன்ற
எம் தலைவனே!
எம் உறவுகள் இருக்கும் வரை எமது
இதயத்தில் பதிப்போம்!

இன்று (2001-06-28) வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் சமூகமைந்தனின் வீட்டுக் கிரியைகளிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் நோயுற்ற போது உதவியோர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் தொடர்பு ஊடகங்களூடாகவும் தந்தி, கடிதம் மூலமாகத் துயர் பகிர்ந்தோர்களுக்கும் செந்தாரகையின் இதயப் பதிவுகள் என்றும் உரித்தாகுக.

அமரரின் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் துதிக்கின்றோம்.

- துணைவி,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*"செந்தாரகை",*
*துன்னாலை மத்தி, கரவெட்டி.*
(89443)

# நெஞ்சகலா நினைவஞ்சலி

## 41ஆம் ஆண்டு

தோற்றம்
22
-
07
-
1913



மறைவு
02
-
07
-
1960

**அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர்**
(முன்னாள் ஆசிரியர், மீசாலை
வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)

## 11ஆம் ஆண்டு

தோற்றம்
23
-
08
-
1920



மறைவு
01
-
07
-
1990

**திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை**
(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை
வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

**திதி: 28-06-2001**

அன்போடும் பண்போடும் வாழ்ந்தீர்களே!
உங்களை நாம் என்றென்றும் நினைவுகூருவோம்.

தங்களின் பிரிவால் வாடும்
- குடும்பத்தினர்.

*மீசாலை.*
(89476)

# ஆடவல்லான் ஆடும் சிதம்பர தரிசனத்தை
# ஆனி உத்தர நாளில் காண்பது புண்ணியம்

இன்று ஆனி உத்தர நன்னாள். இது நடராஜப் பெருமானுக்குரிய தினமாகும். மிகவும் புனிதமும், மகிமையும், விசேசமும் நிறைந்த இந்த ஆனி உத்தரத்திலே அடியார்கள் விரதமிருந்து பெருமானைத் தரிசிப்பார்கள். தேவார பாராயணஞ் செய்து சிவநாமங்களை உச்சரித்து மனத்தை ஒருநிலைப்படுத்தி ஸ்ரீ நடராஜப் பெருமானை இந்த ஆனி உத்தரநாளில் தரிசித்தால் அதைவிடப் புண்ணியப் பேறு வேறில்லை.

இந்த நாளில்தான் நடராஜர் சிவகாமி அம்பாளுடன் திருநடனம் ஆடி ஆனந்தத் தாண்டவஞ் செய்து பக்தர்களுக்குத் தரிசனங் கொடுத்தருளினார் என்பர். முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் ஸ்ரீ நடராஜரின் தரிசனத்தைக் காண்பதற்கு இந்த ஆனி உத்தரத்தையே தேர்ந்தெடுத்துள்ளார்கள். அத்தகைய பெருமை வாய்ந்தது இந்த உத்தர நட்சத்திரம்.

பரங்கருணைத் தடங்கடலாகிய பரமேஸ்வரன் தமது ஆன்மாக்களின் பொருட்டு பஞ்சகிருத்தியங்களையும் செய்கிறார். பஞ்ச கிருத்திய நடனந்தான் சிவனின் திருவிளையாடல். படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்று ஐந்தொழிலையும் செய்யும் ஆண்டவன் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மசேஸ்வரன், சதாசிவன் என்ற ஐந்து மூர்த்தங்களையும் கொள்கின்றார். இதன் அடிப்படையிலேயே ஆலய விழாக்கள் நடைபெறுகின்றன. இன்றைய தினம் அருளல் காட்சி ''கோயில்'' என்று பிரதானமாகக் கூறப்படும் சிதம்பரத்தலம் இந்த ஆனி உத்தர விழாவுக்கு மிகவும் உகந்த தலமாகும். ஆனி மாத மகோற்சவம் நிகழ்ந்து தீர்த்தோற்சவம் வருவது இந்த ஆனி உத்தர நாளில் தான். மிகமிகக் கோலாகலமாக நடைபெறும்.

## இன்று ஆனி உத்தர நன்னாள்

அதிகாலையிலேயே ஸ்ரீ நடராஜரின் தரிசனத்தைக் காண்பதற்காக அடியார்கள் அங்கே கூடிக்குழுமி விடுவார்கள். நடேசப் பெருமானுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று பால், தேன், கரும்பு, இளநீர், பூ, தயிர், நெய் என இன்னோரன்ன பல பொருள்களால்நீராடுதல்நடைபெறும். விபூதி அபிஷேகம், சந்தனாபிஷேகம், குங்குமாபிஷேகம் என்பனவற்றால் பெருமான் மகிழ்ந்திருப்பார். இது கண்கொள்ளாக்காட்சி.

அதன்பின் மலர்மாலைகளால் அலங்கரிக்கப் பெற்று அழகிய திருக்கோலத்துடன் நடராஜர் பக்தர்கள் புடைசூழப் புறப்படுவார். ஆயிரங்கால் மண்டபத்தில் ஐயனின் தரிசனம் காணக்கண் கோடி வேண்டும். ஜன சமுத்திரத்தின் நடுவே தெப்பமொன்று மிதந்து வருமாப் போல் இக்காட்சி தென்படும்.

இந்த ஆனி உத்தர தரிசனம் அருமையிலும்அருமையானது. இந்தக் காட்சி காண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அல்லல் அறுத்து ஆனந்தம் அளிக்கும் தில்லைச் சிதம்பரத்திலே இன்று கோலாகலமான திருவிழா. பெருந்திரளான அடியவர்கள் தில்லையிலே ஸ்ரீ நடராஜப் பெருமானின் தரிசனம் காண்பதற்காக முண்டியடித்துக் கொண்டு முன்னேறுவர். தரிசனம் கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் அவர்கள் காணப்படுவார்கள்.

''குனித்த புருவமும்
கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்
போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும்
வேண்டுவதே
இம்மாநிலத்தே''

இந்த நடராஜரின் ஆனி உத்தரத் தரிசனங் காண்பதற்கு மனிதப்பிறவி நிச்சயம் வேண்டும். ஆனந்தத் தாண்டவமாடி அசைந்து அசைந்து வரும் அந்த அற்புதக் காட்சி பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும். அங்கே பார்த்தவர்களுக்குத்தான் இது புரியும்.

ஈழத்திலே காரைநகர் சிவன்கோயிலிலே இந்தக் காட்சியைக் கண்டு தரிசிக்கலாம். இன்று இந்த ஆனி உத்தர விரதத்தை முறையாக அனுட்டித்து சிவதரிசனஞ்செய்தால்இம்மையிலும் மறுமையிலும் நற்பயனை அடையலாம் என்பது ஆன்றோர் கருத்து.

ஆகவே, சைவமக்களாகிய நாம் இன்றைய ஆனி உத்தர நன்னாளில் ஆலய தரிசனஞ் செய்து, ஆண்டவன் நாமத்தை உச்சரித்து, தான தருமங்களைச் செய்து, இரப்பார்க்கு ஈந்து வயிறார உண்ணக் கொடுத்து மானசீகமாக தில்லை நடேசப் பெருமானைத் தரிசித்து சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வோமாக.

''தில்லைக்காட்சி போல்
வேறில்லைக் காட்சி
தொல்லைகள் தீர்ந்து
நன்மைகள் அடைவோம்.''

★

சைவப்புலவர், 'கவிமணி'
**இராசையா ஸ்ரீதரன்**

## கியூடெக் நடத்தும் நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 28

கரிதாஸ் இலங்கை — 'செடேக்' ஆதரவுடன் ''கியூடெக்'' நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான நாடகப் போட்டி ஒன்றை மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் நாடகங்களுக்கு பெறுமதி மிக்கபரிசில்கள் வழங்கப்படுவதுடன் முதலாமிடம் பெறும் நாடகம் அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ள போட்டியில் பங்குபற்றுவதற்குரிய ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் என ''கியூடெக்'' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

''புதிய உதயம்'' என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள இந்த நாடகப் போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளின் அதிபர்கள் உடனடியாக விண்ணப்பங்களை அனுப்புமாறும் இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி. ஜெயக்குமார் அடிகளாருடன் தொடர்பு கொள்ளுமாறும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க-4)

## மாநகரசபைக் கூட்டம் இன்று

யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மாநகரசபை முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-5)

# பாலியல் வல்லுறவுக்கு எதிராக கடும்சட்டங்கள்இயற்றவேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

கொழும்பு, ஜூன் 28

அவசரகாலச் சட்டம்,பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றைப் பயன்படுத்தி பாதுகாப்புப் படையினர் தமிழ்ப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி வருகின்றனர். இந்தச் சட்டங்களை அகற்றி பாலியல் வல்லுறவுக்கு எதிராகக் கடும் சட்டங்களை இயற்ற வேண்டும்.

புதிய ஜனநாயகக்கட்சியின் அரசியல்குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்நாட்டில் தமிழ்ப்பெண்கள் வீட்டிலும் இருக்க முடியாது, வீதியிலும் நடமாட முடியாது என்ற அபாயகர நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். சட்ட ஒழுங்குக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பானவர்கள் என்று வரையறுக்கப்பட்டவர்களேதமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக் கொடுமை புரிந்து வருவதில் முன்னிலை வகித்து வருகின்றார்கள்.

அண்மைய நாள்களில் மன்னார், நீர்கொழும்பு,பம்பலப்பிட்டி, மருதானை ஆகிய இடங்களில் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட இழி செயல்கள் இதனை நிரூபிக்கின்றன'

மருதானையில் சோதனைச் சாவடியில் வைத்தே மலையகத் தமிழ் இளம் பெண் மூன்று பொலீஸாரால் சூறையாடப்பட்டுள்ளார். இது தலைநகரிலும் மற்றும் பிரதேசங்களிலும் ஆடைத் தொழிற்சாலை உட்பட தொழிலகங்களிலும் குறைந்த சம்பளத்தில் இராப்பகலாகத் தொழில் புரிந்து வரும் மலையக யுவதிகளை அச்சத்திற்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது. இவ்வாறு தமிழ்ப் பெண்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் பாலியல் வல்லுறவுச்சித்திரவதைகளை எமது புதிய ஜனநாயகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் இதனைத் தடுத்து நிறுத்த ஆவன செய்ய வேண்டுமென வலியுறுத்துகின்றது.

மேலும் அவ் அறிக்கையில் நாட்டின் அதிகாரம் படைத்த ஜனாதிபதியாக ஒரு தாய் பதவி வகித்தும், அவரேபடைகளுக்குப் பொறுப்பானவராகவும் இருக்கும் சூழலிலேதான் படையினர் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச்செயல்களைத் தொடர்ந்தும் இழைத்து வருகின்றனர். அவர்கள் அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் தமது கைகளில்வைத்துக் கொண்டே இவ்வாறான ஈனச் செயல்களைப் புரிந்து வருகிறார்கள்.

எனவே இச் சட்டங்களை அகற்றுவதும், பாலியல் வல்லுறவுக்கெதிரானகடுமை மிகு புதிய சட்டம் இயற்றப்படுவதுமே தமிழ்ப் பெண்களுக்கு ஓரளவாவது பாதுகாப்பைத் தரவல்லதாகும் என்பதை எமது கட்சி சுட்டிக்காட்டுகிறது என்றுள்ளது. (க-3)

## மருந்துக்குத் தட்டுப்பாடு

வடமராட்சி, ஜூன் 28

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சலரோக நோயாளர்களுக்கான மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கடந்த இருவாரங்களாக இம்மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை இருந்து வருவதால், இந்நோய்க்கு மருந்து பெறவரும் நோயாளர்களிடம் வெளிக்கடைகளில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (ம-173)

## கருத்தரங்கு

இலங்கை முதலுதவிச் சங்கமும் யாழ். செயலகக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் இணைந்து நடத்தும் விழிப்புணர்வுக்கருத்தரங்குகள் நாளை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி ஆகியவற்றில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமய சந்நிதிகளில்

மல்லாகம், கோட்டைக்காடு சாளையம்பதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும்மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க-10)

★ ★ ★

புளியங்கூடல், இந்தன் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகமும், குரு வழிபாடும் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10. 17 மணிக்கு நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமைபகல்12 மணிக்குத் தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமைவரையும் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம் பெறும். (க-10)

★ ★ ★

தொல்புரம் ஸ்ரீ ஜெகஜோதி அம்பாள் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது. ஆரம்ப கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (க-28)

★ ★ ★

கச்சாய் புனித இராயப்பர் தேவாலய நவநாள் உற்சவம் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.இன்று மாலை 4.30 மணிக்கு திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் இடம்பெற்று நாளை காலை 8, 30 மணி திருநாள் திருப்பலி பூஜைநடைபெறும். (உ-117)

## ஸ்ரான்லியில் சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். கல்வி வலயத்தின் சித்திரக் கண்காட்சியை எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தக்கண்காட்சியைக் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் ஆசிரியர்களும் மாணவர்களும் பார்வையிடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்: 12 — 03 — 1946



விண்ணில்: 30 — 05 — 2001

### திருமதி அழகரத்தினம் செல்லம்

30-05-2001 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன்

நாளை (29-06-2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
களஞ்சியன் தோட்டம்,
கரவெட்டி கிழக்கு.

(89533)




மூத்த எழுத்தாளர் சொக்கன் எழுதிய 'இலக்கியக் கருவூலம்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன் ஆகியோர் உரையாற்றுவதையும் -

பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், நூலாசிரியர் சொக்கன், அ.பௌநந்தி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு, மஹாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் - படத்தில் காணலாம். (ஐ)

**ஆளும் தரப்புக்கோ ஐ.தே.கட்சிக்கோ ஆதரவு தரத் தயாரில்லை**

# ஜே.வி.பியின் பெறுமதி இப்போதுதான் இரு கட்சிகளுக்கும் விளங்கியுள்ளது

## கண்டியில் நடந்த கூட்டத்தில் செயலாளர் ரில்வின் சில்வா

கொழும்பு,ஜூன்28

இன்றைய அரசியல் நெருக்கடியானவேளையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் எமக்கு அமைச்சரவையில் அரைவாசி இடங்களைத் தரத் தயாராக உள்ளன. ஆனால் இவ்வாறான பதவிகளைப் பெற்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் காற்றில் பறக்கவிட ஒரு போதும் தயாரில்லை.

கண்டி டீ.எஸ்.சேனநாயக்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஜே.வி.பி. கூட்டத்தில் உரையாற்றிய அதன் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின (ஜே.வி.பி.) பெறுமதி இப்போதுதான் அவ்விரு கட்சிகளுக்கும் விளங்கியுள ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்விரு கட்சிகளும் தமக்கு ஆதரவு தரும்படி கேட்கின்றன. யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது பற்றி நாம் முடிவெடுக்கவில்லை.

ஐ.தே.க.சமர்ப்பித்துள்ள அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையால் அரசை பதவி கவிழ்க்க முடியும் என்று நான் எண்ணவில்லை.

இவ்விரு கட்சிகளும் பிரபுத்துவக கொள்கைகளைப் பின்பற்றியே சென்று கொண்டிருக்கின்றன.

இந்த நாட்டை இரு கட்சிகளும் வெளிநாட்டவர்களுக்கு விற்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன.

இதனால் நாம் இவ்விரு கட்சிகளுக்கும் ஆதரவு வழங்கத் தயாரில்லை. சிறிதளவேனும் இந்த நாட்டு மக்களுக்கு உதவிகளையும் வேலைத் திட்டங்களையும் வழங்கும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதில் எந்தத் தவறுகளும் இல்லை.

ஆனால் ஒரே கொள்கையுடைய இரு கட்சிகளையும் ஆதரிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்த்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை ஏற்படுத்துவதில் எந்தப் பயனுமில்லை.

இன்று எமது நாடு பாரதூரமான அரசியல் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. ஒரு துறையில் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தவும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி கொள்ளவும் அரசு முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகிறது.

அதேநேரம் மிக விரைவில் பொதுத தேர்தல் ஒன்றும் நடைபெறவுள்ளது. இத் தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலையில் ஜே.வி.பி. அதன் சக்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஒட்டிக் கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் ஏனைய ஆறு எம்.பிக்களும் எதிர கட்சி அணியில் சேர்ந்தது அரசுக்கு பெரும் சவாலாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் போல பொதுஜன ஐக்கிய முன்னணியாலும் வடக்கு, கிழக்கு யுத்தத்தை நிறுத்த முடியாது. சமாதானப் பேச்சுக்களும் வெற்றியளிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வன்னியில் தங்கியுள்ள இடத்தை இன்று வரை அரசால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பிரபாகரன் உள்ள இடத்துக்குப் போய் அவரைச் சந்தித்துள்ளார்.

அவ்வாறாயின் இந்த நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை சொல் ஹெய்மிடம் ஒப்படைக்கலாம். (க)


**மகாஜனக் கல்லூரிச் சமூகம்**

**பாராட்டி வாழ்த்துகின்றது**

வடக்கு-கிழக்கு மாகாணமட்ட கரபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற எமது பாடசாலையின் 19 வயதின் கீழ் உள்ள அணியினரையும், பொறுப்பாசிரியர் திரு.E.K.V.ஜோன்சன், உதவியாளர், திரு.க.மயில்வாகனம், பயிற்றுநர் திரு.S.ரமணன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(89523)


**இரண்டாம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம்
1949
-
04
-
20



மறைவு
1999
-
06
-
28

வைத்திய நிபுணர்

**Dr. பொன்னம்பலம் சொர்ணலிங்கம்**

MBBS (Cey.) (Honours), MRCS (Eng.), MRCP (UK), LRCP (Lond)

மாண்புமிகு மருத்துவமே செய்த வள்ளல்!
மாதவத்தோன் செய்த சேவை உலகம் காணக்
கற்றவித்தை தனைக் கொண்டே கடமை செய்து
காலனவன் கைப்பட்டுப்போனீர் ஐயா!
பெற்ற மக்கள், பெண்டிரும் கண்ணீர் சிந்த
பெருமையுடன் இறை அடியை அடைந்தீர் ஐயா!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!**

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*

(89519) -மனைவி, பிள்ளைகள்.

## சனியன்று கலைநிலா அரங்க நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்28

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்தக் கலைநிலா அரங்க நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6.15 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளன.

கடந்த 23 ஆம் திகதி நடைபெறவிருந்த மேற்படி நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருந்ததாக திருமறைக் கலாமன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நடனங்கள், குழுப்பாடல், கிற்றார் இசை மற்றும் "ஏகலைவன்" நாட்டுக்கூத்து ஆகியன மேடையேற உள்ளன.

(க-6-4)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி,ஜூன்28

புலோலி மேற்கு, கூவில் ஒல்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோயில் பஞ்ச குண்ட பக்ஷ நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

நாயன்மார்க்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயில் பிரதம குரு, ஆகம கிரியா ஜோதி சிவஸ்ரீ ச. மகாலிங்க சிவக்குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

(ஐ-173)

## பிரதேச சபைக்கு கட்டட வசதி

வடமராட்சி,ஜூன்28

கரவெட்டி பிரதேச சபைக்கு ஒரு கோடி ரூபா செலவில் மாடிக் கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென அல்வாய் மாலி சந்திப் பகுதியில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில் 7 லட்சம் ரூபா செலவில் காணி ஒன்றைத் தனியாரிடமிருந்து கரவெட்டிப் பிரதேச சபை கொள்வனவு செய்துள்ளது. (ஐ-173)


யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம்
நடத்தும்

**A/L 2001**

**கலை, வர்த்தக மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு**

☆ **முதல் நாள் :- 30-06-2001 சனிக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| மு.ப. | 9.00மணி | - கணக்கியல் | - இ.விஜயகுமார் |
| மு.ப. | 10.30மணி | - கணக்கியல் | - T.வேல்நம்பி |
| நண்பகல் | 12.00மணி | - வர்த்தகம் | - இரட்ணம், முரளி |
| பி.ப. | 2.30மணி | - பொருளியல் | - M.கருணாகரன் |

☆ **இரண்டாம் நாள் :- 01-07-2001 ஞாயிற்றுக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| மு.ப. | 9.00 மணி | - இந்துசமயம் | - சிவமகாலிங்கம் |
| மு.ப. | 10.30 மணி | - அளவையியல் | - சு.சயந்தன் |
| மு.ப. | 12.00 மணி | - தமிழ் | - ஜு.சுமலநாதன் |

**இடம் :- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

*குறிப்பு:-*

✷ இலவச கையேடுகள் வழங்கப்படும்.

✷ மேற்படி பாடம் தொடர்பான சகல சந்தேகங்களுக்கும் விடையளிக்கப்படும்.

**Rotaract Club of Jaffna Mid-Town**

*விளம்பர அன்பளிப்பு:-*

**YOGI BEAUTY PARLOUR**

*(யாழ்.நகரில் இயங்கும் ஒரேயொரு மகளிர் அழகு நிலையம்)*

உங்கள் அழகு சம்பந்தமான சகல தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம். சகலவிதமான கிறீம்களும் ஒப்பனைப் பொருள்களும் எம்மிடம் விற்பனைக்குண்டு.

*75, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (89518)


**விண்ணக வாழ்வின்**

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்**

மலர்வு
25
-
12
-
1917



உதிர்வு
29
-
05
-
2001

**திருமதி பாக்கியம் சின்னப்பு**

"ஆண்டவருக்குள் இருப்பவர் பேறு பெற்றோர்"

**கருணைத் தெய்வமே இறைவா!**
**உமது அடியாளாகிய பாக்கியம் சின்னப்புவின்**
**ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றினைக்**
**கொடுத்தருளும்!**

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டும் தொலைபேசி, கந்தி, தொலைநகல் மூலம் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (28.06.2001) வியாழக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
பாலு திலகராசா (J.P)
*2ஆம் கட்டை,*
*இராச வீதி,*
*கோப்பாய் மத்தி.* (89517)

பிரிவால் துயருறும்:
-பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்.

# மரண அறிவித்தல்

## அருளம்பலம் பரமலிங்கம்

கோவளம், காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் பரமலிங்கம் நேற்று (27-06-2001) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், சாந்தராணியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், ஜேர்மனியில் வசிப்பவர்களான நிசாந்தினி, கிருசாந்தினி, அமிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகாமசுந்தரி (வவுனியா), செல்வதி (பதுளை), சீவரட்ணம் (பிரான்ஸ்), லோகேஸ்வரி (அமெரிக்கா), சிவதேவி (வவுனியா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகநாதன், விக்னேஸ்வரன் (பதுளை), மோகனா (பிரான்ஸ்), செல்வராசா (அமெரிக்கா), தேவராசா (வவுனியா), சிவரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யோ.சிவரஞ்சன்,
*27, பிரப்பங்குள ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(89521)

தகவல்:-
அ.இராசலட்சுமி (தாய்)
யோ.சிவரஞ்சன் (மைத்துனர்)
சிவரஞ்சன் ஸ்ரோர்ஸ்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 2369

## ஐ.நாவின் பிரகடனங்களை நிறைவேற்றுவது தொடர்பாக

# சித்திரவதைகளுக்கு எதிரான ஸ்ரீலங்காவின் அக்கறையை சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்துள்ளது

## வதிவிடப் பிரதிநிதி கொலின் கிளனி கருத்தரங்கில் தெரிவிப்பு

கொழும்பு,ஜுன்28

சித்திரவதைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதில் தனக்கிருக்கும் உறுதிப்பாட்டை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி கொலின் கிளனி வலியுறுத்தி இருக்கிறார்.

சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளது என்பதைச் சர்வதேச சமூகம் உற்றுநோக்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட 'சித்திரவதையினால் பாதிப்புக்குள்ளானோருக்கு ஆதரவு தெரிவிக்கும் தினத்தை' முன்னிட்டு கொழும்பு மகாவலி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கொலின் கிளனி உரையாற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய பலரும் இலங்கையின் சமூக வாழ்வில் சித்திரவதைகள் சாதாரணமான விடயமாகி விட்டதைப் போல் அதைச் சகித்துப் போகும் தன்மை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியதுடன், இத்தகைய போக்குக் காரணமாக நாட்டின் சகல தரப்பு மக்களும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்றும் கவலை தெரிவித்தனர்.

பாதுகாப்புப் படையினராலும் பொலீஸாராலும் இத்தகைய நடவடிக்கைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆள்களைக் கடத்திச் சென்று சித்திரவதைகளைச் செய்வதற்கென்றே 'மாபியா'க் கும்பல்கள் கொழும்பில் இயங்குகின்றன. உலக நாடுகள் பலவற்றிலும் சித்திரவதைகள் இடம்பெறத்தான் செய்கின்றன. ஆனால் இலங்கையில் அவை ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் மேற்கொள்ளப்படுவது பாரதூரமான ஒரு விடயம்.

இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகச் சித்திரவதைகளைச் சகித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருப்பது அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது என்றும் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

கொலின் கிளனி கருத்தரங்கில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை எவ்வளவு தூரம் அக்கறையாகவுள்ளது என்பது குறித்துச் சர்வதேச சமூகம் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

### ஐ.நாவின் 4 பிரகடனங்கள்

ஐக்கிய நாடுகள் சபை சித்திரவதைகளுக்கு எதிரான நான்கு பிரகடனங்களை நிறைவேற்றியுள்ளது. பல நாடுகள் உள்நாட்டுச் சட்டங்களையும் இயற்றியுள்ளன. எனினும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதை இல்லாமல் செய்வதென்பது கடினமாகவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பிரகடனத்திற்கு அப்பால் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் இது குறித்து அக்கறை செலுத்துகின்றது. சித்திரவதை நடவடிக்கைகளை மேற்கொள்வோரை மனித குலத்திற்கு எதிராகக் குற்றமிழைத்தவர்களாகக் கருத வேண்டும். கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் குழுக்களையும் ஏற்படுத்தியுள்ளது. தகவல்களைப் பெறுவதற்காகவும், சிறுபான்மைச் சமூகம் ஒன்றை அச்சத்திற்குள்ளாக்குவதற்காகவுமே சித்திரவதை நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

அரசியல் எதிரிகளுக்கு எச்சரிக்கையை அளிப்பதற்கும் மாற்றுக் கருத்துக்களை உடையவர்களை மௌனமாக்குவதற்கும் இது பயன்படுத்தப்படுகின்றது. ஜனநாயக நடைமுறைகளுக்கும் இது பலத்த சவாலாக அமைந்துள்ளது. உலக அகதிகளில் 25 வீதமானோர் ஏதாவதொரு வகையில் சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

### டெஸ்மன்ட் பெர்னாண்டோ

ஜனாதிபதி சட்டத்தரணியும், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான டெஸ்மன்ட் பெர்னாண்டோ கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இலங்கையின் உள்நாட்டுப் போர் படையினரைக் காட்டுமிராண்டிகளாக மாற்றி விட்டதாக ஆத்திரத்துடன் கூறினார்.

அவ[illegible] உரையில் தெரிவித்ததாவது:-

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தின் போது இழைக்கப்பட்ட கொடூரங்கள், மனித குலத்தின் மனச்சாட்சியை மிக மோசமாகப் பாதித்துள்ளன. அதுவரையில் அரசாங்கங்களால் இவ்வளவு காட்டுமிராண்டித்தனமாகச் செயற்பட முடியும் என மக்கள் உணர்ந்திருக்கவில்லை.

### ஐ.நா. பிரகடனங்களை இலங்கையும் ஏற்றுள்ளது

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனத்தில் சித்திரவதைக்கு எதிரான பிரிவு சேர்க்கப்படுவதற்கு இதுவே காரணமாக இருந்தது. ஐக்கிய நாடுகள் இதன் பின்னர் சித்திரவதை நடவடிக்கைகளைத் தடை செய்யும் பல தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தது. இலங்கையும் சித்திரவதைக்கு எதிரான பிரகடனங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின் கீழ் சித்திரவதை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் யாவும் விசாரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையில் இது தொடர்பாக இதுவரை 10இற்கும் குறைவானவர்களே விசாரிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக மன்னார், அம்பாறைப் பகுதிகளில் கடந்த இரு வருடங்களில் சித்திரவதைக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மன்னாரில் விடுதி ஒன்றிலிருந்து இரு பெண்களைக் கடற்படையினர் சித்திரவதைகளுக்கும், பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்கிய சம்பவம் அண்மையில் நடைபெற்றது. அந்தப் பெண்கள் இருவரையும் பொலீஸார் இரண்டு வாரங்களுக்கு மேலாகத் தடுப்புக் காவலில் வைத்திருந்த பின்னரே மன்னார் நீதிவான் முன்னிலையில் ஒப்படைத்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலீஸாரும் பாதுகாப்பு அதிகாரிகளும் தங்களது விசாரணைகளை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். மன்னாரில் தங்களை விசாரணை செய்வதால் தங்களது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர். சாட்சியமளிப்பவர்கள் அநுராதபுரத்திற்கும் கொழும்புக்கும் வருவதைத் தடுப்பதற்கே இந்த வேண்டுகோளை அவர்கள் விடுத்துள்ளனர்.

சித்திரவதை நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் சுலபமாகத் தப்பிக்கக் கூடிய வாய்ப்புகள் இலங்கையில் அதிகமாகக் காணப்படுகின்றன. இலங்கையின் இனமோதல்கள் பாதுகாப்புப் படையினரைக் காட்டுமிராண்டித்தனமானவர்களாக மாற்றியுள்ளது. இது பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக மோதல்களுக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது முக்கியமானதாக அமைகின்றது. தமிழ் மக்களினது கௌரவமும், உரிமைகளும் எவ்வகையிலும் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிசெய்வது இதனை விட முக்கியமானதாகும்.

### அலட்சியப்படுத்தப்படும் இந்துக்களின் உரிமைகள்

இலங்கையில் இந்துக்களின் உரிமைகள் எவ்வாறு அலட்சியப்படுத்துகின்றன என்பதற்கு பல உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம். இந்துக்களின் வழிபாட்டு இடங்களுக்கு உரிய மதிப்பளிக்கப்படுவதில்லை. மன்னாரில் திருக்கேதீச்சரத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இராணுவம் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக வழிபாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இராணுவம் வடக்கு - கிழக்கை கட்டுப்பாட்டுப் பகுதி, கட்டுப்பாடற்ற பகுதி என இரண்டாகப் பிரித்துள்ளது. இது இராணுவத்தின் செயற்கையான கருதுகோளாகும். இவ்வாறு தானே ஒரு பிரிவினையை உண்டாக்கிவிட்டு அதில் ஒரு பகுதிக்கு உணவுப் பொருள்களையும், மருந்து வகைகளையும் அனுப்ப மறுத்து வருகின்றது.

இனப்பிரச்சினை என்பது வெறுமனே அரசியல் பிரச்சினையே. இதற்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்றார்.

### லக்ஷ்மன் குணசேகர

பத்திரிகையாளர் லக்ஷ்மன் குணசேகர தமதுரையில் கூறியதாவது:-

சித்திரவதைகளைத் தடுப்பதற்கு எதிரான போராட்டத்தில் இலங்கையின் ஊடகங்கள் தோற்றுப்போயுள்ளன. இராணுவ அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றனர் என்பது தெரிந்திருந்தும் அவற்றை வெளியிடுவதற்கு ஊடகங்கள் அச்சப்பட்ட காலங்கள் இருந்தன.

ரிச்சர்ட் சொய்ஸாவைக் கொலை செய்தது யார் என்பது தெரிந்திருந்தும் அதனை அச்சத்தால் வெளியிடாமல் இருந்தோம். இலங்கையின் மக்கள் மனதிலுள்ள கருத்துக்கள் காரணமாகவும் இதற்கு எதிராகப் போராட முடியாமல் உள்ளது - என்றார். (க)

## 'எக்ஸ்–ரே பிலிம்' கழுவும் மருந்து விமானத்தில் எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம்,ஜுன்28

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 'எக்ஸ் - ரே பிலிம்' கழுவுவதற்கான கலவை மருந்தில் 60 லீற்றரை உடனடியாக விமானம் மூலம் எடுத்து வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

இந்த மருந்து இல்லாமையினால் கடந்த சில நாள்களாக யாழ். போதனா வைத்தியசாலை 'எக்ஸ் - ரே' பிரிவு முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது தெரிந்ததே.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருந்து வகைகளை அனுப்பி வைப்பதற்கான உறுதிமொழியை பாதுகாப்பு அமைச்சும், மருந்து விநியோகிக்கும் திணைக்களமும் அமைச்சருக்கு வழங்கியுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

## கப்பல் பயணப் பதிவு நாளை நடக்காது

'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பலுக்கான பதிவுகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டாது என்று 'றான்' அலுவலகம் அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 17ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கப்பல் சேவைக்கான பதிவுகள் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


ராஜா யாழ்ப்பாணம்
9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN சிட்டிசன்
தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே)
(C/17000)

லக்ஷ்மி இணுவில்.
விஜயகாந்த்,லைலா, நாசர்
நடிப்பில்
கள்ளழகர்
(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
இனிய பாடல்கள், சண்டை காட்சிகள்
நிறைந்த படம்.
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (ப.நே.)
(இரண்டாவது கடைசி வாரம்)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், மீனா
நடித்த
சேதுபதி IPS
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறு விசேட காட்சி 6.30 மணிக்கு
(89524)


## கண்ணீர் அஞ்சலி



கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தினதும்,
சனசமூக நிலையத்தினதும்
ஆரம்பகால உறுப்பினரும்,
எமது இணைந்த வைங்கிங்ஸ்
விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகருமான

**அமரர் P.R.தம்பிநாயகம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து துயர் கொள்வதோடு அவரின் ஆன்மா இறைவனில் அமைதியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*குறிப்பு :* அன்னாரைக் கௌரவித்து கழக மண்டபத்தில் இன்று (28-06-2001) வியாழக்கிழமை அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

*குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.*

கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகமும்,
சனசமூக நிலையமும்.

(89531)

## துயர் பகிர்கின்றோம்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்
குடும்பநல உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி மகாலட்சுமி தேவராஜா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மயில்வாகனம் நல்லம்மா**

அவர்களின் மறைவினால் ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துத் துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலர்கள்,*
*பருத்தித்துறை.*

(89528)

## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

**செல்வி த. நவீனா** (நவிக்குட்டி)

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த
தயாபரன் - சுபா தம்பதிகளின்
செல்வப் புதல்வி நவீனா
தனது 2ஆவது பிறந்ததினத்தை
கடந்த 26.06.2001 செவ்வாய்க்கிழமை அன்று தனது இல்லத்தில்
வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

நவிக்குட்டியை அன்பு அம்மப்பா – அம்மம்மா, சித்தி, லண்டனிலுள்ள மதன்மாமா, டென்மார்க்கிலுள்ள பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார் மற்றும் சித்தப்பாமார், அத்தைமார் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முருகன் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*கைத்டி மேற்கு,*
*கைதடி*

(89529)

தகவல்:
M.கேசனா (சித்தி)

## கட்சி மீது சேறு பூச முயல்கிறது அரசு

# புலிகள் மீதான தடைநீக்கம் குறித்து ரெலோவுடன் ஒப்பந்தம் ஏதுமில்லை

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்28

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக ஐ.தே. கட்சிக்கும் ரெலோ அமைப்புக்கும் இடையில் எந்தவித ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை. குறுகிய அரசியல் பொய்ப் பிரசார நடவடிக்கைகள் மூலம் ஐ.தே.கட்சி மீது சேறு பூச அரசு முயல்கிறது.

- இவ்வாறு ஐ.தே.கட்சி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான கருணாசேன கொடித்துவக்கு விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் கூறப் பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குமாறு எதிர்க்கட்சித் தலைவரினால் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது எனக் கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. இது முழுப் பொய்யாகும். உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவினால் அத்தகைய கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே கடந்த 22 ஆம் திகதியன்று எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியையும், பிரதமரையும், வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சிகள் தொடர்பாகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர் சமாதான முயற்சிகளுக்குத் தமது கட்சியின் ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதிக்கு உறுதியளித்தார். சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் முகமாக பேச்சு நடத்தவும் ஐ.தே.கட்சி இணங்கியது. வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை என்பதே எமது நிலைப்பாடாக இருக் கிறது.

ஜனாதிபதி - எதிர்க்கட்சித் தலைவர் இடையிலான பேச்சுக்களைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மதான தடையை நீக்குவதற்கு ஐ.தே.கவுக்கு தேவை இருப்பதாக அரச ஊடகங்களின் ஊடாகப் பிரசாரம் செய்யப்பட்டது.

அந்தப் பிரசாரத்தின் ஓர் அங்கமாக -

"புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவதற்கு ரெலோ இயக்கத்துடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ளும் அளவுக்கு ஐ.தே.க. தேசத்துரோகியாகியதேன்?

"ஐ.தே.கட்சி ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் புலிகள் மீதான தடையை நீக்குவதாக ஐ.தே.கட்சித் தலைமைத்துவம் தனது கட்சிக்கு உறுதிமொழி அளித்துள்ளதாக ரெலோ நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக் கிறார்."

- என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

ரெலோ இயக்கத்துடன் அத்தகைய ஒப்பந்தம் ஒன்றை நாம் செய்யவில்லை. இன்றுவரை அந்த அமைச்சரின் கருத்தைத் திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மூதூரில் 10 கிராமங்கள் நேற்று சுற்றிவளைப்பு

திருகோணமலை,ஜூன்28

மூதூர் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பத்து தமிழ்க் கிராமங்கள் நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன. நேற்று அதிகாலை ஆரம்பமான இந்தத் தேடுதல் பிற்பகல் வரை நீடித்ததாக திருமலைச் செய்திகள் தெரிவித்தன.

இந்த சுற்றிவளைப்புத் தேடுதல் காரணமாக சம்பந்தப்பட்ட பத்து தமிழ்க் கிராமங்களிலும் நேற்று வழமையான செயற்பாடுகள் அனைத்தும ஸ்தம்பிதமடைந்திருந்ததாகவும் -

திருகோணமலை மற்றும் ஏனைய இடங்களில் இருந்து மூதூர்ப் பகுதிக்குச் சென்ற பஸ்கள் அனைத்தும் மகிந்தபுரம் பகுதியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன எனவும் -

அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (ம-7)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்28

ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுறைப்பகத்தின் ஆதரவில் நடத்தப்படும் அதிபர்களுக்கும் கோட்டக் கல்வி அலுவலர்களுக்குமான ஆரம்பக் கல்விச் செயலமர்வு இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக் கிழமையும் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம)

## தே.ஐ.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார் ஹக்கீம்.

தேசிய ஐக்கிய முன்னணியின் உயர்பீடத்துக்கு 23 பேரையும் ஹக்கீம் நியமித்தார். அந்த 23 பேரில் பேரியல் அஷ்ரப்போ, ஹிஸ்புல்லாவோ இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைகள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடந்தன. மாணவர்கள் வரவின்மையால் பாடசாலைகள் இயங்கவில்லை.

மேற்படி பகுதிகளுக்கான பஸ் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டிருந்தன. வீதிகளிலும், பொது இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. (ம-7)

## பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

ஜனாதிபதிப் பதவிக்குரிய அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றமுடியாது என ஜனாதிபதி உணர்ந்தால், அவற்றை நிறைவேற்றும் அதிகாரங்களைப் பிரதமரிடம் ஒப்படைக்கும் ஏற்பாடுகள் அரசமைப்பின் 37(1) ஆவது பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் மேலும் -

"நோய் காரணமாக அல்லது அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்களை சுயமாகத் தன்னால் நிறைவேற்றமுடியாது என ஜனாதிபதி கருதுவாரேயானால், அக்கால எல்லையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றவும், செயற்படுத்தவும் ஜனாதிபதியினால், பிரதமர் நியமிக்கப்படலாம். மேலும் இக்கால எல்லைக்குள் பிரதமரின் கடமைகளைக் கவனிப்பதற்காக ஜனாதிபதி வேறு எந்த அமைச்சரையும் நியமிக்கலாம்" - என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கடமைகளைத் தம்மால் நிறைவேற்ற முடியாதென உணர்ந்தே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அப்பதவியின் பொறுப்புகளை பிரதமரிடம் ஒப்படைத்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார்.

இதனை காலதாமதம் செய்தேனும் ஜனாதிபதி உணர்ந்து கொண்டிருப்பதையிட்டு இலங்கை மக்கள் மகிழ்ச்சியடையவேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# குடாநாட்டில் உயிரிழந்த புலிகள் மூவரின் பெயர் விவரங்கள் அறிவிப்பு

வவுனியா,ஜூன்28

திருநெல்வேலி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் கடந்த 22ஆம், 23ஆம் திகதிகளில் இடம்பெற்ற சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த மூன்று உறுப்பினர்களின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலி நேற்று இதனைத் தெரிவித்தது.

திருநெல்வேலியில் இடம்பெற்ற சம்பவத்தில் மேஜர் சுதன்(அம்பிகைபவான் பரந்தாமன் - யாழ்ப்பாணம்), கப்டன் மித்திரன்(தில்லைநாதன் தவச்செல்வன் - யாழ்ப்பாணம்) ஆகியோரும் -

கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் கலைக்கண்ணன் (கந்தையா கஜன் - யாழ்ப்பாணம்) என்பவரும் -

உயிரிழந்ததாகப் 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (ம-7)

## செங்கலடியில் பிஸ்ரல் குழு தாக்குதல்

மட்டக்களப்பு,ஜூன்28

மட்டக்களப்பு - செங்கலடியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பிஸ்ரல் குழுவினரின் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

தங்கராசா சுரேஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் மட்டக்களப்பில் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க்கட்சி ஒன்றின் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தலையில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்றுப் பிற்பகல் அங்குமரணமானார். (ம-7-21)

## தன் பொறுப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பையும் பல்வேறு ஊகங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

நாட்டின் அரசியல் நிலைமை ஸ்திரமற்றுக் காணப்படும் இந்த வேளையில் - நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை அரசு இழந்துள்ள சூழலில் - ஜனாதிபதி திடீரென உத்தியோகப்பற்றற்ற வெளிநாட்டுப் பயணம் ஒன்றை - அதுவும் தமது பொறுப்புக்களை பிறிதொருவரிடம் ஒப்படைத்துவிட்டு - மேற்கொண்டிருப்பது பல்வேறு அரசியல் கட்சிகளினதும் விசனத்துக்குள்ளாகியிருக்கின்றது.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டே ஜனாதிபதி சந்திரிகா லண்டன் சென்றதாக தனியார் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

லண்டனில் கல்வி பயிலும் தனது மகளது பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றவும் எதிர்வரும் 29ஆம் திகதி வரும் மகளது பிறந்த நாளைக் கொண்டாடும் முகமாகவுமே அவர் லண்டன் சென்றதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-7)

## அரசை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிபெறச் செய்வது குறித்தும் -

அரசுக்கு எதிரான போராட்டங்களைத் திட்டமிடுவது குறித்தும் -

ஐதேகட்சியின் சகல எம்பிகளும் இன்று கொழும்பில் கூடி ஆராயவுள்ளனர். (ம-7)

## சந்திரிகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் குறித்து லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நேரில் சந்தித்து ஆராய்வதற்காகவோ -

ஜனாதிபதி குமாரதுங்க லண்டன் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்த இருவருமே இலங்கைச் சட்டங்களின்படி நீதிமன்றங்களின் முன்னர் நிறுத்தப்பட வேண்டிய குற்றங்களைப் புரிந்துள்ளனர் என்றும் -

இவர்களில் யாரைச் சந்தித்துப் பேசுவதென்றாலும், ஜனாதிபதி என்ற அதிகாரத்தோடு பேசி, அதன்மூலம் எழக்கூடிய சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காக, தனது ஜனாதிபதிப் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களை வேறு ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு, ஜனாதிபதி லண்டன் சென்றிருக்கலாம் என்றும் - கூறப்பட்டது. (உ)


யாழ்.பல்கலைக்கழக
நுண்கலைத்துறையும் கலைவட்டமும்
இணைந்து வழங்கும்

முதுசம் நிகழ்வுத் தொடர்-4
தஞ்சாவூர்



கண்ணாடி ஓவியங்களின் காட்சி
இன்று ஜூன் 28 மாலை 2.00 மணி - 4.00 மணி வரை.
ஜூன் 29,30 காலை 10.00 மணி - 4.00 மணி வரை.
இடம் : நூலக கேட்போர் கூடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
பிரவேசம் 10/-

சிறப்புற வாழ்த்துவோர்:-
(89503)

| வரதமகள் ஆடைச் சோலை | POONGANI SOOLAI |
|---|---|
| பிரதான வீதி, பருத்தித்துறை. | RAMALINGAM ROAD, MUDAMAVADY, THIRUNELVELY. |



IIS இல்
அதிரடி விலைச் சலுகையில் கணனிகள்

நவீன கணனிகள் உதிரிப்பாகங்களை உள்ளடக்கிய விசேட காட்சியறை ஒன்று எதிர்வரும் 05-07-2001 முதல் 14-07-2001 வரை IIS தலைமை அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்படவுள்ளது.
இங்கு நவீன கணனிகளையும் உதிரிப்பாகங்களையும் பார்வையிடுவதுடன் மட்டுமல்லாமல் நீங்கள் கொழும்பு விலையில் பல்வேறு சலுகைகளுடன் பெற்றுக்கொள்ளவும் முடியும்.
மேலதிக விவரங்களை
1.7.2001 திகதிய உதயனில் பார்க்கத் தவறாதீர்கள்!

Director, IIS,
100, Clock Tower Road,
Jaffna.
(C/17233)



இரண்டு வருட உத்தரவாதத்துடன்
உங்கள் கையில் கணனி
Pentium III 866 MHz, 933MHz, 1000 MHz Computers
Intel Pentium III 1000 MHz Processor

Mother board Gigabyte
40 GB Quantum Hard Disk Drive
256 MB SDRAM
15" SVGA Colour Monitor - View Sonic
8MB VGA Card
1.44MB Floppy Disk Drive
ATX Casing
Key Board (Win 98)
Mouse and Pad
Acer 52X CD Rom Drive
32 Bit 3D Sound Cards(Creative)
480 - Watts Speaker
Modem 56K (Motola)



Modem, Scanners, UPS 650VA, 1000VA, Floppy disks, Colour Cartridge, Printers LQ-300, HP Laser Jet 1100, Cannon BJ 1000, Cannon Laser Jet
மற்றும் கணனி உதிரிப்பாகங்களுக்கு......
JAFFNA TECHNICAL INSTITUTE
No.07, Palaly Road, Jaffna.
(இலுப்பையடிச் சந்தி அருகில்)
(C/17245)


## மரண அறிவித்தல்

### பொன்னையா றெமிசியஸ் தம்பிநாயகம்

(முன்னாள் உரிமையாளர் பிறேமளா கபே,
யாழ். உதைபந்தாட்டச் சங்க மத்தியஸ்தர்)

நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொ.றெ.தம்பிநாயகம் 21.06.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(28.06.2001) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இரங்கல் திருப்பலியுடன் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.327/9, கதீற்றல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (89530)

தகவல்:-
டனிசியஸ் பிறேமநாயகம்
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.